உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௫] வெகுதானிய௵ சித்திரை௴ [பகுதி-௬.

Vol. 35. *April—May 1938.* No. 6.

கம்பராமாயணசாரம்.

[௩௱௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

வருணனை வழிவேண்டுபடலம்.

(இராமன் படையுடன் கடலைக் கடத்தற்குக் கடற்கடவுளாகிய) வருணனை வழிவேண்டியதைக் கூறுவது.

இராமன் வருணனைவேண்டி வரங்கிடத்தல்.

[இராமன், 'இலங்கையை அடைந்தால், இராக்கதரை வெல்வது எளிது. அதற்குக் கடலைக் கடத்தல்வேண்டும். கடல்கடக்கும் உபாயம் யாது?' என, விபீடணன், 'வருணனை வேண்டி வழிபெறல்வேண்டும்' என, இராமன் கடற்கரையை அடைந்தான். அப்போது, சூரியோதயமாக, இராக்காலத்தில் இருளினுற் கவரப்பட்டிருந்த உலகம் இருள்நீங்கி விளங்கிய காட்சி, கிரகணகாலத்தில் இராகுவினுல் விழுங்கப்பட்டிருந்த சந்திரன் உமிழப்பெற்று விளங்கிய தோற்றத்தை ஒத்தது. கருணைக் கடலாகிய இராமன், கருங்கடலைநோக்கித் தருப்பசயனத்தின்மீதே படுத்தபடியே, வருணமந்திரத்தைச் செபித்தவண்ணமாக, வதனமண்டலத்தில் பரிதிமண்டலத்திலிருந்துபாயும் வெய்யிலைத் தாங்கிக்கொண்டு எழுநாள்முடியுமளவும் பொறுமையோடு வரங்கிடந்தான்.

*

வருணன் வாராமையால் இராமன் கோபங்கோள்ளல்.

அவ்வளவுகாலமாகியும் வருணன் வாராதிருக்கவே, குளிர்ந்த நீரிலிருந்து கொதிக்கும் தீ உதித்தாற்போல, இராமனது இதயமாகிய சாந்தசமுத்திரத்தினின்று கோபமாகிய வடவாமுகாக்கினி கிளர்ந்தது. இயல்பாகச் சிவந்த கண்கள், வெஞ்சினத்தால் மிக அதிகமாகச் சிவந்தன. 'மனைவியை இழந்து வருந்தும் நான் வழி வேண்ட, வருணன் மறுப்பானாய் வாராதிருந்தான். தாரத்தையிழந்தவன் வீரத்தையு மிழந்தான் என்று இகழ்ந்தான். குறைவொன்றுமில்லாதிருந்த ஒருவர்க்கு ஒருகுறைநேர, அதனை நீக்கும்படி யாராயினும் ஒருவர்பாற்சென்று இரப்பாராயின், இரந்தவர் தம் குறைநீங்கப்பெறினும் பெறுவிடினும் இரந்ததாகிய குறையினின்றும் நீங்குதல் இல்லை*. சரந்துரந்து பெறற்பாலதாகிய வழியை வரங்கிடந்து பெறமுயன்றதனால் எளியனென்று இகழ்ந்த வருணனது எழுகடல்முழுவதும் சாம்பலாக எரித்து அச்சாம்பற் புழுதிவழியே என்படை நடந்துசெல்லச் செய்வேன்.]

30 மறுமை கண்டமெய்ஞ் ஞானியர் ஞாலத்து வரினும்
வெறுமை கண்டபின் யாவரும் யாரென விரும்பார்
குறுமை கண்டவர் கோழுங்கன லென்னினும் கூசார்
சிறுமை கண்டவர் பெருமைகண் டல்லது தேறார்.

கோண்டுகூட்டு: மறுமைகண்ட மெய்ஞ்ஞானியர் ஞாலத்து வரினும், வெறுமைகண்டபின் யாவரும் (இவர்) யார் என (அறிதற்கும்) விரும்பார். கொழுங்கனல் எனினும் குறுமை கண்டவர் (அணைத்தற்குக்) கூசார். சிறுமை கண்டவர், பெருமைகண்டல்லது தேறார்.

போருள்: உண்மையுணர்வால் மோட்சலோகத்தை யடைந்த பெரியோர் இந்தப் பூலோகத்துக்கு (வரமாட்டார்கள். ஒருகால்) வருவாரானால், (இந்தப்பூமியில் உள்ளார் அவரிடத்துப்) பொருளின்மையைக் கண்டபின் (அலட்சியஞ்செய்து, இவர்) யாரென்று அறிதற்கும் விரும்பார். (உலகமுழுவதையும் எரித்தழிக்கவல்ல)

* 'ஒன்றும் வேண்டலராயினும்; ஒருவர்பால் ஒருவர்-சென்று வேண்டுவரேல், அவர் சிறுமையிற்றீரார்'. (இப்படலம் 9-ஆம்பாட்டு.) தீர்தல்-நீங்குதல்.

நெருப்பேயானாலும் (அது அசட்டைசெய்யும்படியான அளவு) சிறிதாயிருப்பதைத் தெரிந்தவர் (அதைக் காலால் தேய்த்தோ, கையால் கசக்கியோ அணைத்தொழித்தற்கு) அஞ்சார்கள். (சிறிதாயிருந்த நெருப்பு வளர்ந்து தன்பெருமையைக் காட்டினாலன்றி, அதைச் சிறிதென்றிகழ்ந்தவர் அதன் வலிமையை உணரமாட்டார்கள். அவ்வாறே) ஒருவரது சிறுமையைக்கண்ட(லட்சியஞ் செய்த)வர், அவர்பெருமையைக் கண்டல்லாமல், (அவர்தோற்றத்திற்போல உண்மையிலும் சிறியரென்று மயங்கியிருந்த மயக்கம்) தெளியமாட்டார்கள்.

இராமன், தான் காயிலேநின்று காட்டில் வாழ்ந்து இல்லாளை இழந்த எளிமையைக் கண்டு இகழ்ந்த வருணன் வலிமைகண்டாலன்றித் தன்னை மதியானென்று கூறினனென்பது கருத்து.

தேவலோகத்துவாழ்தலாகிய பதமுத்தியையும் கடவுளுடன் ஐக்கியமாவதாகிய பரமுத்தியையும் குறிக்கும் 'மறுமை', இங்கே 'வீடு மோட்சம்' எனப்படும் பரமுத்தியைக் குறித்தது, 'மறுமைகண்ட மெய்ஞ்ஞானி' என்றதனால். 'மறுமைகண்ட புண்ணியர்' என்றிருந்தால் 'மறுமை', சுவர்க்கபதவியைக் குறித்திருக்கும். வெறுமை - எளிமை - தரித்திரம். கூசுதல் - அஞ்சுதல். 'குறுமை கண்டவர் கொழுங்கன லென்னினுங் கூசார்' என்பதற்குச் 'சிறியவராகக் காணப்பட்டவர் (தமது ஒழுக்கத்தால்) கொழுவிய நெருப்பேயாயினும் (அவரிடத்தும் தம் பணிவுதோன்றக்) கூசிநடக்கமாட்டார்' என்பது முந்திய உரை.

கடல்மீது இராமன் அம்பெய்தல்.

[என்றுகூறி, இராமன் சினந்து 'இலக்குமணா! வில்லைக்கொடு' என, அவன் கொடுக்க, அதனை வளைத்து நாணேற்றி விரலால் தெறித்து ஒலியெழுப்ப, அந்த ஒலியால் எல்லாப் பொருள்களோடு கயிலைமலையும் அதிர்ச்சியடையச் சிவனோடு ஊடிப் பிரிந்திருந்த உமாதேவி அந்த அதிர்ச்சிக் கஞ்சி அவனைத் தழுவிக்கொண்டாள். பின்பு உலகமுற்றிலுமுள்ள நீர் முழுவதையும் குடித்தொழிக்கும் உகாந்தகால சூரியகிரணங்கள்போன்ற அம்புகளைக் கடலின்மேற் செல்ல விடுத்தான். அந்த அம்புகள், கடலிலுள்ள மீன்முதலிய பொருள்களையெல்லாம் எரிக்கக் கடற்குட்டம் அக்கினிக்குண்டம்.

போன்றது. முதுகிற் செங்குத்தாக அம்பு தைத்தபடியே ஓடும் மீன்கள், பாய்மரத்தோடு செல்லும் மரக்கலங்களை யொத்தன. அக்கினி கக்கும் அம்புகளால் கொதிக்கும் கடல் வாணலியாக, கடல்நீர் நெய்யாக, மிதக்கும் மீன்கள் வதக்கும் காய்கறிகள் போன்றன. அம்புகளால் எரியுண்டு வறண்ட கடற்பள்ளத்துக் காணப்பட்ட மாணிக்கங்கள், தீக்கங்குகள்போன்றன. அங்கங்கே அம்புகளால் உண்டாகிய தீப்பிழம்புகள் விளங்கும் கடல், செந்தாமரைமலர்கள் பூத்துப் பொலியும் தடாகத்தை யொத்தது. பிறப்பறுத்து வீடெய்தும் நிலையிலுள்ள பெரியோர் பிறப்பறுக்க மாட்டாத பிறமக்களை உய்வித்தற்பொருட்டுப் பிறப்புறுதல்போல், அம்புகள் அக்கினிகக்கி யெழுப்பிய புகையினின்றுந் தப்பிய ஆண் பறவைகள், புகையினின்றும் வெளிவராத பேடைகளைத் தப்புவிக்கும்பொருட்டுத் தாம் நீங்கிய புகையுள் மீண்டும் புகுவனவாயின. அந்தப் பெரும்புகை சுவர்க்கமளவும் அளவிச் சுற்றலால், இமைத்தலும் வேர்த்தலும் இயல்பாக இல்லாத இமையோர் இமைப்போரும் வேர்ப்போருமாயினர். இராமபாணத்தாலுண்டாகிய எரி, இலங்கையை நெருங்கக்கண்ட இராக்கதர், அநுமான் தீக்கொளுத்தத் திரும்பிவந்தானோவென்று தியங்கினர். கடலிலுள்ள பவளக்காடு, தீப்பட்டெரிந்து கருகிக் கரிக்காடுபோன்றது. நீர்வற்றினமையால் கடலிடையே திட்டுக்கள் தோன்ற, அத்திட்டுக்களிலுள்ள செம்மணித்திரள், பூமாதின் உடல் திறக்கப்பட்டு ஓடுகின்ற உதிரத்தை ஒத்தன. நீர்வறண்ட மணிகள் நிறைந்த கடல், இரத்தினங்கள் நிரம்பிய பணிப்பெட்டி திறக்கப்பட்டதுபோலத் திகழ்ந்தது. இராமபாணத்தால் தாக்கப்பட்ட குன்றுகள், ஒன்று நூறுயிரங் கோடியாக நொறுங்கின. இராமன் கோபித்தேவிய அம்புகளால், மாண்ட உயிர்களெல்லாம் (நல்லோர் கோபம் முடிவில் நன்மை பயக்குமென்பது விளங்க) நற்கதியடைந்தன. இராமபாணங்களால் உண்டான தீயினாலும் அவைகளால் மடிந்த பிராணிகளின் இரத்தத்தினாலும் நீலக்கடல் செங்கடலாகியது, கடலை ஆடையாகவுடைய பூமிதேவி, முன் உடுத்திருந்த நீலப்பழஞ்சேலையை நீக்கிச் சிவப்புப் புதுச்சேலை யுடுத்தியதுபோலத் தோன்றியது. இராமபாணங்களாலாகிய புகை, மேலே சென்று தாக்கச் சுவர்க்க

லோகத்திலுள்ள தேவர்கள் மேலே கிளம்பிப் பிரமலோகம்போய்ச் சேர்ந்தார்களென்றால், மற்றையோர் உற்ற தன்மையைச் செப்புவ தெப்படி?

இராமன் பிரமாத்திரம் தொடுத்தல்.

'இன்னும் வருணன் வந்தானில்லை; அவனை விரைந்து வரச் செய்தற்கு, இதுவே தக்கது' என்று கருதி இராமன் பிரமாத்திரத் தைத் தொடுத்தான். தொடுக்கவே, விண்ணவர் பயந்து மெய்ந் நடுங்கினர். மேகங்கள் வெருவிக் கதறின. வருணன் பயந்து வாயுலர்ந்து அலறினான். தொடுக்கப்பட்டதன்றி விடுக்கப்படாத பிரமாத்திரத்தின் வெப்பினால், அண்டத்துக்கு அப்புறத்துள்ள பெரும்புறக்கடலும் கொதித்ததென்றால், இப்புறத்துள்ள எழு கடல் பட்டபாட்டை இயம்புவானேன்! சங்கரன்சடையிலேயுள்ள கங்கைநீரும் கொதித்தது! பிரமதேவனது கமண்டலத்துநீரும் குளுகுளுவென்று கொதிக்கலானது!

வருணன் வரவு.

வருணன், நெருப்புச்சுவாலையும் புகைப்படலமும் எங்கும் நிரம்ப, வழிதெரியமாட்டாத பார்வையும் அழுது கண்ணீர்வடிதலு முடைய கண்ணினனாய், அஞ்சிய நெஞ்சினனாய்த் தொழுகின்ற கையினனாய்த் துதிக்கின்ற நாவினனாய்க் குருடன் நெருப்பின் மேல் நடப்பதுபோல் நடந்துவந்தான்.

அவன் இராமனைச் சரணமடைதல்.

அவன், 'சுவாமீ! கடலின் கடைக்கோடிக்குச் சென்றிருந் தேன்; ஆதலால், நீ என்னை வரும்படி நினைத்ததை யறிந்தேனில்லை. எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய நீ சீறினால், உன்னையன்றிப் புகல்புகுதற்கு ஒருவர் உளரோ? உன் வலியன்றி எனக்கொரு வலியுளதோ? என்வலியைச் சோதிப்பானேன். உலகங்களையெல் லாம் தோற்றுவித்து நிலைப்பித்து ஒடுக்கும் நீ, என்திறத்தில் இத்தனைசெய்யவேண்டுமோ? என்னை உள்ளிட்ட எல்லாம் நீயா யிருக்க, நீ என்னைநோக்கி, 'யான் உன்னை இகழ்ந்தேன்' என்பது என்னே! "தன் பெருமை தானறியாத் தன்மையான்" என்றவாறு,

உன்பெருமையை நீயே உணராய். யான் எவ்வாறு உணர்வேன். யான் உலைந்து போனேன். காப்பாயாக' என்று காலில் வீழ்ந்து, சூரியனைப் பழிப்பதாகிய சோதிமிக்க ஒரு மணிமாலையை அடியுறையாக வைத்து வணங்கினான்.

இராமன் சினம் தீர்தல்.

கொதித்துப் பொங்கியெழுகின்ற பால், குளிர்நீர் தெளிக்கத் தணிகின்றதுபோல, வருணன் வழுத்தலால் இராமன் கோபந் தணிந்து 'அஞ்சாதே' என்று அபயமளித்து 'நான் வணங்கிய போது வாராமல், சீறியபோது வந்தகாரணம் யாது' என்றான். வருணன், 'ஏழாம் கடலிலே இருந்தேனாதலின், நீவரங்கிடந்ததை அறிந்தேனில்லை. உன் அம்புகளினால் உணர்த்தப்பெற்றேன்' என்றான். இராமன், 'இந்த அம்பு வீண்போகாது. இதற்கு இலக்கு யாது?' என, வருணன், 'மருகாந்தாரமென்னும் தீவில் வாழும் கொடிய அசுரர்கூட்டம் இலக்காம்' என, இராமன், தொடுத்திருந்த பிரமாத்திரத்தை விடுத்தான். அது அத்தீயவரை மாயச்செய்து திரும்பியது.

வருணன் விடைபெறல்.

பின் இராமன், 'வானரசேனை செல்லுதற்கு வழிதருக' என, வருணன், 'என் (கடலின்) முதுகின்மீது சேது செய்து செல்க' என்றான். இராமன், 'கடல்மீது மலைகளையடுக்கிச் சேதுசெய்க' என்று கட்டளையிட்டுத் தன் இருப்பிடஞ் சென்றான். வருணனும் விடைபெற்றகன்றான்.]

வருணனை வழிவேண்டுபடலம் முற்றிற்று.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

பழநி மாம்பழக் கவிச்சிங்கநாவலர் சரிதம்

[௧௧உ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

14. நாவலர் கவிநயம்.

நாவலரவர்கள், ஸ்ரீபொன்னுச்சாமிவள்ளலின் ஈகையை மிகவும் சிறப்பித்து அக் கொடைநலத்தைக் கைம்மாறுகருதாத மேகத்தினும் வரையாதளிக்கும் கற்பகத்தருவினும், காமதேனுவினும் மேம்படக் கூறியதோடு அமையாது, மேலும், இயல்பிலே கலைமடந்தை தனதுமெய் வெளுத்துப் படைப்புக்கடவுளாகிய நான்முகன்நாவிற்சென்று உறைவதைப் பொன்னுச்சாமித்தேவர் புலமைக்கு நாணமடைந்தென்றும், தமிழ்க்கடவுளாகிய முருகப்பெருமான் ஆறுமுகங்கொண்டு ஐயன் என அசலத்தின்மீது ஆலயங்கொண்டதும் தமிழ்முனிவன் மிகவும் குறுகிப் பொதியத்திற்சென்று வதிவதும் பொன்னுச்சாமித்தேவர் கல்விக்குமுன் நமது கல்வி எம்மாத்திரம் என்று வெட்கியே என்றும், புலவர்களது கலியிருளைப் போக்குவதற்கென்றே எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் விளங்கும் பொன்னுச்சாமித்தேவர்திருமுகத்தைப்போல் தன்முகத்தைச் செய்தற்கு விரும்பிய கலாநிதியாகிய சந்திரன், தன்னுள் களங்கமிருப்பதால் அதனை நீக்குதற்குத்தான் நாடொறும் கடலில் மூழ்கி எழுகின்றானென்றும் கற்பனைசெய்து கவிகள் பாடினர். அக்கவிகள் வருமாறு:—

முகில்.

கருவிமுகில் கடல்கவர்ந்தோர் பருவமிரும்
புனல்பொழியக் கற்றே மல்லான்
மருவுபிறர் பொருள்விரும்பா தநுதினமு
நவமணிபொன் வாரி வாரித்

தருமுசித சமுகபொன்னுச் சாமிமக
பதிசெழுங்கைத் தலம்போ லேமென்
றருவமிகக் கறுத்துவெற்பி னூடொதுங்கிப்
பனித்துவிண்சென் றுறையு மாதோ.

கற்பகம்.

உவந்துவந்து தாழ்வானே ருருவுகொளக்
கடியவல ருடைய தாக
நிவந்துவெம்பா மரமெனவாழ் கற்பகமுற்
றவரேபன் னிதிகொள் வாரேற்
பவந்தவிர்மே லவர்பயிலப் பழிமுனிந்து
மதிச்செழுங்கற் பகமாய்ச் சீர்த்தி
துவன்றபொன்னுச் சாமிமன்ன! நின்னையடை
வோர்பேறுஞ் சொல்லற் பாற்றே!

காமதேனு.

குடிலநெறி பயின்றுபுலே விரும்பிமட
மிகுந்துபயங் கொடுமுட் டுற்ற
கடியசுர பியையடைவோர் கருதுபொருள்
பெறுவரெனிற் கபடமின்றிப்
படிமொழிதப் பாதுதிறல் பழுத்தமர்வென்
றனந்தநிதி படைத்த நின்னை
நெடிதுறுவோ ரெவைபொருந்தார் நேமபொன்னுச்
சாமியென்னும் நிருப ரேறே.

கலைமடந்தை.

உவமைவிலக்கு—விருத்தம்.

வாமுயர்தென் புதுவைபுரி தவத்தின் சீரால்
வந்தபொன்னுச் சாமிமன்ன! வளருன் கல்வித்
தாமுணர்ந்து வியந்துதமிழ் மடந்தை தானுந்
தன்மெய்வெண் மை யாகிவெறி தவழும் வண்டார்

பாவுமல ரிடைக்குடிபுக் கிருந்து மேலாம்
பயனிலமா யினமினியப் பயன்கொள் வாமிந்
நாபதிபா னமையிவரே பெற்ற தாதா
நாமகளே யாமெனநின் னுவுற் றூளே.

ஆறுமுகனும்—அகத்தியரும்.

உவமைவிலக்கு—விருத்தம்.

தடசயில புயபொன்னுச் சாமிமன்ன!
நினதுகல்வித் தாத்தா னணி
யடலுடைய குகனுமறு முகங்காட்டி
யையனென வமர்ந்தா னன்றிக்
குடமுனிவ னுந்தமிழி லாங்குவடு
மேவியின்னங் குறுகு வானேற்
புடவிதனி லெவருளர்நற் புகழ்வளரு
முனக்குநிகர் புகலற் கம்மா!

சந்திரன்.

உவமைவிலக்கு—விருத்தம்.

தலைமைபெறு நிருபர்சிகா மணியாய்ச் சான்றோர்
தமக்கணியா யுதித்தபொன்னுச் சாமியென்னுங்
கலைநிதியே! கலாநிதிநின் முகம்போன் மென்பர்
கவிஞர்சில ரதுநிதமிக் கவின்கொள் வாமென்
றலையினிடைப் பணிந்துபடிந் தெழுந்து மாசோ
டாமைகண்டு வெள்கிமெலிந் தறவுங் கூனி
மலையுமல துனதுமுகம் போன்று வெய்ய
வனுக்குமறுக் கலியிருளை மாற்றி டாதே.

நாவலர் இவ்வாறு பொருளணிகளமையச்செய்யுளியற்றுவதே யன்றிச் சொல்லணிபலவும் ஒருங்கமையச் சிறந்த பொருட்பொலிவுடைய செய்யுட்களை இயற்றும் ஆற்றலும் உடையராயிருந்தனர். அது பின்வரும் செய்யுளால் விளங்கும்.

மடக்கடி விருத்தம்.

மருவிரி பந்து வெருவுற நொந்து
வளைசிமிழ் கடைபட் டுந்து
வடகிரி கோடத் தடமுகை வாட
மருண்டுபம் பாஞ்சுழன் றூடப்

பருமணி பொறுத்துக் கருதுகச் சறுத்துப்
பணைத்தொளிர் கண்கறு கறுத்துப்
பவத்தொடர் நீங்குந் தவத்தரு மேங்கும்
படியடி படர்ந்தடர்ந் தோங்கும்

இருமுலை யிருந்து மொருமுலை பொருந்து
மெழின்மதன் வாவிவள் வருந்து
மியல்கொள லாமா நயகுண சோமா!
வின்பநன் கருள்செழுந் தாமா!

தருவெனு நேமா! பொருபல வீமா!
சகமெலாம் பணிரகு ராமா!
தயைமலர் மின்னுக் கியைபுய பொன்னுச்
சாமிரா ஜேந்த்ரவுத் தமனே.

15. நாவலர் ஸேதுஸமஸ்தானத்துப் புலவரா யமர்ந்ததும் அப்பொழுது நிகழ்ந்த சம்பவங்களும்

இங்ஙனம் நாவலர் தம்மைப் புதுப்புதுக் கருத்தமைந்த கவிகளால் புகழ்ந்துபாடியதைக்கேட்டுப் பெருமகிழ்வுற்ற தேவர், கவிகேசரியைநோக்கிச் செந்நாப்புலவீர்! நீவிர் நம் ஸம்ஸ்தானத்தில் தமிழ்வித்துவானுக அமர்ந்திருந்து நமது பேரவையை நுமது அளப்பரிய புலமையால் அலங்கரிப்பதோடு, தனிமையிலும் எம்முடன் அளவளாவியிருந்து புத்தமுதனைய கற்பனைக்கவிகளாலும், விற்பனமிகுந்த சொற்பொழிவுகளாலும், சாகஸமும் சமற்காரமும் நிறைந்த சம்பாஷணைகளாலும் நமது செவிகளுக்கு நல்விருந்தூட்டி இன்பக்கடலுள் ஆழ்த்துமாறு பெரிதும் விரும்புகின்றோம் என்றனர். நாவலரும் அதற்கிசைந்து அன்றுமுதல் ஸேதுஸம்ஸ்தானத்துப் புலவர்திலகராய் விளங்கியிருந்தனர்.

[தொடரும்.]

சி. கு. நாராயணசாமிமுதலியார்.

உ

ஶாஸமஹாகவி இயற்றிய

பிரதிஜ்ஞா யௌகந்தராயணம்.

[கசஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

மூன்ருவது அங்கம்.

விதூஷகன்:—(மாறுவேஷங்கொண்டு அரங்கிற்புகுந்து) கோயில் முன்திண்ணையில் என்னுடைய மோதகங்களை வைத்துவிட்டு, எனக்குத் தக்ஷிணையாகக் கிடைத்த பொற்பயறுகளை எண்ணிப் பார்த்துக் கட்டிக்கொண்டு திரும்பிவந்து பார்க்கும்போது, அவை களைக் காணவில்லையே. ஓ! ஒருமோதகத்தால் திருப்திகொள்ளா மல் என்னைச் சுணங்கன் தொடர்ந்துவருகிறதே. கோயிற்பிரா காரம் உயரமாயிருப்பதால் நாய்களால் ஏறமுடியவில்லை. மோதகம் நன்ருய்ச் சமைக்கப்பட்டிருப்பதால் வழிப்போக்கர்கள் அதைக் கொள்ளவிரும்புகிருர்கள். எஞ்சியிருக்கும் இதையாவது தின்னு கிறேன். வயிறு நிறைந்துவிட்டதால் வெளியில் கக்குகிறேன். ஹீ! ஹீ! கிழப்பன்றிபோல் வெறும் காற்றையே கக்குகிறேன். ஒருகால் ஸ்ரீகாத்தியாயனிதேவிக்குப் படைத்தது தன்னைச்சார்ந்த தென்று பரமசிவன் நினைத்து அவைகளைக் கவர்ந்தாரோ? இந்தப் பிரமசாரி பலபல வேஷங்களால் இறுமாப்புக்கொள்ளுகிருன். நான் பார்க்கிறேன். ஓ! என்னுடைய மோதகம் பரமசிவனுடைய பாதத்தில் கிடக்கிறது. அதை எடுக்கிறேன். சாமி! என் மோத கத்தைக் கொடுத்துவிடும். சாமி! நீரும் களவாடினீர்போலும். ஐயோ! என்மோதகம் வர்ணங்களால் வரையப்பட்டிருக்கிறதே! வெய்யிலிற் கண்கள் கூச்சமடைவதால் நன்ருகப்பார்க்கமுடியவில்லை யே! நான் அதை அழுத்தித் துடைத்துப்பார்க்கிறேன். ஹீ! ஹீ! சித்திரக்காரனே! நல்லது. நன்ருக வர்ணம் வைக்கப்பட்டிருப்ப தால் அழிக்க அழிக்க அதிகமாக ஒளிர்கிறதே! தண்ணீர்கொண்டு

கழுவுகிறேன். நீர் எங்கே கிடைக்கும். இதோ நல்ல தண்ணீர்க் குளம். என்னைப்போல் பரமசிவனும் இந்த மோதகத்தில் ஆசையற்றவராயிருக்கட்டும். மகாஸேனருடைய நகரத்து அலங்காரமாயிருக்கிற வாஸவதத்தையின்மீது நம் அரசர் காதல்கொண்டதைத் தெரிந்து, அமைச்சரான யௌகந்தராயணரிடம் கூறும்படி அரசர் உரைத்த பொன்போன்ற சொற்களை, (என்) மனத்திற் பதியவைத்துக்கொண்டு, மறுநாள் இவ்வூரைவிட்டுக் கௌசாம்பிநகரத்துக்குச் செல்லவேண்டுமென்று நண்பர்களிடம் தெரிவித்துவிட்டுத் திரும்பி வந்து பார்க்கும்போது, அமைச்சரைக் காணவில்லையே. அவர் ஏன் வரவில்லை? ஆ! சரிதான், இப்போதுதான் நினைவுக்கு வந்தது. உதயணனைப்பிடித்ததனுல்மட்டும் மகாஸேநர் திருப்தி அடையவில்லை. அவருடைய மந்திரிகள், யௌகந்தராயணரைப் பிடிக்க முயன்றும், அவருடைய புத்திவலிமையை அவர்களாற் கடக்க முடியவில்லை. ஒற்றர்களாலும் நம் காரியத்துக்குத் தடைசெய்ய முடியவில்லை. யோசித்துப் பார்க்கிறேன். இவ்வூரில் நமது காரியத்துக்குக் கெடுதிசெய்யவல்லவர்கள் ஒருவருமே இல்லை.

[யௌகந்தராயணர் பலபடியான உபாயங்களால் நமது அரசரை விடுவித்துப்போவார் என்று, விதூஷகனின் சொற்களில் மறைபொருளும் இருப்பது குறிப்பிடத்தக்கது.]

(திரைக்குள்) மோதகம் மோதகம் ஹ ஹ ஹ!

விதூஷகன்:—இந்தப் பித்தன் என்னுடைய மோதகத்தைப் பறித்துச் சிரித்துக்கொண்டு, நுரைகளுடனும் அழுக்குகளுடனும் வீதிகளில் வேகமாய்ச் செல்லுகிற மழைஜலம்போல் இங்கேயே ஓடிவருகிறுன். பித்தனே! நில் நில், இந்தத் தடியால் உன் தலையைத் தகர்க்கிறேன்.

பித்தன்:—(அரங்கிற்புகுந்து) மோதகம்! மோதகம்! ஹ ஹ ஹ!

[யௌகந்தராயணன் பித்தன்வேஷம்பூண்டு பிறர் அறியாவண்ணம் வத்ஸராஜனை வாஸவதத்தையுடன் கௌசாம்பிநகரத்துக்கு மறுநாள் அழைத்துப்போகப்போவதை நினைத்துச் சிரித்தல்.]

விதூஷகன்:—அடே பித்த! என்னுடைய மோதகத்தைக் கொண்டுவா.

பித்தன்:—என்ன மோதகம்? எங்கே மோதகம்? எவனுடைய மோதகம்? இந்த மோதகங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றனவா? செய்யப்படுகின்றனவா? அல்லது தின்னப்படுகின்றனவா?

விதூஷகன்:—தின்னப்படுவதுமில்லை; செய்யப்படுவதுமில்லை; சிருஷ்டிக்கப்படுவதுமில்லை.

பித்தன்:—என் நா அதைத் தின்ன விழைந்து வாய்க்குள்ளேயே சுழல்கிறது.

விதூஷகன்:—பித்த! என் மோதகத்தைக் கொண்டுவா. பிறர்பொருளில் ஆசைவைத்து அதை மறைக்காதே.

பித்தன்:—எவரெவர்களோ எனக்கு இன்னல்விளைவிக்கிறார்கள். மோதகங்களே என்னைக் காக்கின்றன.

நைபத்²யவிஶேஷஶோபி⁴தா꞉ ப்ரீதிஸ்வோத்பாத³யிதவ்யஸம்ப்⁴ருதா꞉ ।
ராஜக்³ருஹவிக்ரீதக்ரயா꞉ காலவஶேந ஸம்ஹ்ருதப்ரபா⁴வா꞉ ॥

அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டனவாயும், இன்பத்தை உண்டாக்கவேண்டுமென்று முயற்சிப்பவையாயும், அரசர்கள் வீட்டில் விலைக்கு வாங்கப்பட்டனவாயுமுள்ள இவைகள், காலக் கொடுமையாற் சற்று வலியற்றவை ஆகின்றன.

['என் நண்பர்கள் என்னைக் காக்கிறார்கள்; மாறுவேஷம்பூண்டு பிறர் அறியாமல் திரிகிறார்கள்; கௌசாம்பியில் அரசரிடம் ஊதியம் பெற்றுவருவதால் விசுவாசத்துடன் இருக்கிறார்கள். முனிவருடைய சாபத்தாற் சற்று வலிமைகுன்றியவர்கள்போற் காணப்படுகிறார்கள்; அவர்கள் சமயத்தில் உதவிசெய்வார்கள்' என்பது மறைபொருள்.]

விதூஷகன்:—ஹே! பித்த! என் மோதகத்தைக் கொணு. இந்த அடையாளத்துடன் நான் உபாத்தியாயரின் இல்லம் செல்லவேண்டும்.

பித்தன்:—இந்தக்குறியுடன் யானும் வெகுதூரம் செல்ல வேண்டும்.

விதூஷகன்:—நீ என்ன? ஐராவதமென்ற யானையா?

பித்தன்:—நான் ஐராவதமே; தேவராஜன் என்னை வாகனமாகக்கொண்டு என்மீது ஏறுவதில்லை; காற்கட்டுக்களால் தேவேந்திரன் கட்டப்பட்டான் என்று நான் கேள்விப்படுகிறேன். மழைத் தாரைகளாற் கட்டப்பட்டும், மின்னல்களாகிற சாட்டைகளால் அடிக்கப்பட்டும், காற்றினால் மோதப்பட்டும் சுற்றித் திரிகிற முகிலாகிற சிறைச்சாலை அவனால் தகர்க்கப்படுகிறது.

விதூஷகன்:—நீ எனக்குக் கொடாவிடில் நான் சத்தமிடுவேன்.

பித்தன்:—சத்தம் செய்; சத்தமிடு, அல்லது அலறுவாயாக.

விதூஷகன்:—ஐயோ! ஐயோ!

பித்தன்:—நானும் ஓலமிடுகிறேன். ஐயோ! இந்திரன் கட்டப்பட்டான், தேவேந்திரன் கட்டப்பட்டான்.

விதூஷகன்:—ஐயோ! ஐயோ!

(திரைக்குள்) அஞ்சவேண்டாம் அஞ்சவேண்டாம், தொழத்தக்கவரான பார்ப்பனரே! அஞ்சன்மின்.

விதூஷகன்:—(களிப்புடன்) சந்திரன்வந்தால் நக்ஷத்திரங்கள் தோன்றும். சீ! பார்ப்பனத்தன்மை பயனற்றதே! பிச்சையெடுக்கிற ஆண்டியால் எனக்குத் தேறுதல் சொல்லப்படுகிறது.

சிரமணகன்:—(அரங்கமேறி) பார்ப்பனரே! பயங்கொள்ளற்க. இங்கே எவனெவன்? என்னகாரியம்? ஏன் சத்தமிடுகிறான்?

விதூஷகன்:—இந்தப்பித்தன் என் மோதகத்தைப் பிடுங்கிக் கொண்டு கொடுக்க மறுக்கிறான்.

சிரமணகன்:—மோதகத்தைப் பார்க்கவேண்டும், கொண்டுவா.

பித்தன்:—சிரமணகரே! நீவிர் பார்க்கலாம்.

சிரமணகன்:—தூ—தூ!

விதூஷகன்:—சீ! சீ! பிச்சையெடுக்கிற ஆண்டியால் தூ! தூ! எனச்சொல்லி இகழப்பட்டமையால், அதிர்ஷ்டங்கெட்டவனுன என்னுடைய மோதகங்கள் பித்தன்கையில் அசுத்தமாகிவிட்டனவே.

சிரமணகன்:—பித்தனே! இவைகளைக் கொடுத்துவிடு. இந்த மோதகங்கள் கஸ்தூரிநுரைபோல் வெளுத்தவையாயும், யுவதியின் எச்சில்பட்டு அழகுவாய்ந்தனவாயுமுள்ளன; சாருயம்போல் இனிப்புவாய்ந்தவைகளான இவைகளை நான் தின்ருல் உனக்கு ஒரு குறையும்வராது.

விதூஷகன்:—ஐயோ! மோதகங்கள் எனக்கு உவப்பானவைகளே.

சிரமணகன்—கொடுத்துவிடு. கொடாவிடில் உன்னைச் சபித்துவிடுவேன்.

விதூஷகன்:—பொறுத்தருளவேண்டும். பகவானே! என்னைச் சபிக்கவேண்டாம்; பெற்றுக்கொள்ளும், பெற்றுக்கொள்ளும்.

சிரமணகன்:—என்னுடைய மகிமையைக் காண்பாயாக.

விதூஷகன்:—இந்தப்பித்தன் பிச்சையெடுக்கும் ஆண்டியால் கொடுக்கப்படும் சாபத்துக்குப்பயந்து, மோதகத்தைத் தன்னுடைய கையின் நுனியில் வைத்துக்கொண்டு நிற்கிருன்.

சிரமணகன்:—நீ போகலாம். மோதகங்களை வைத்துக்கொண்டு எனக்கு ஆசி கூறுவாயாக.

விதூஷகன்:—ஹீ! ஹீ! என்னுடைய மோதகங்களை வைத்துக்கொண்டு நான் ஆசிகூறவேண்டுமாம். என்கையிலிருந்தே எடுத்துக்கொள்ளப்பட்ட அவைகள் உனக்கும் உபயோகப்படும்; அவனும் நன்ருய் இருக்கட்டும். இந்தப்பித்தன் அக்கினிசாலையை நோக்கிச் செல்கிருன். நடுப்பகல் வந்துவிட்டது. காலைவேளையிலேயே இந்த இடம் சூன்யமாயிருக்கும். எனக்குத் தக்ஷிணையாகக்.

கிடைத்த பொற்பயறுகளை வழியிலுள்ள வீட்டில் வைத்துவிட்டுப் போகிறேன். ஒருவனுக்கு ஆடை; மற்றொருவனுக்கு அதன்விலை.

யௌகந்த:—வஸந்தகனே! அக்நிசாலை சூன்யமாய் இருக்கிறதே.

வஸந்தகன்:—இங்கே ஒருவரும் இல்லை.

யௌகந்த:—ஆதலால் நீங்கள் இருவரும் தழுவிக்கொள்ளுங்கள்.

இருவரும்:—நல்லது (இறுகத் தழுவிக்கொள்ளுதல்)

யௌகந்த—உங்கள் இருவருக்கும் சிரமம் அதிகம். நீ உட்காருவாயாக; நீயும் வீற்றிருப்பாயாக.

இருவரும்:—நல்லது.

(எல்லோரும் உட்காருதல்)

யௌகந்த:—தலைவரை நீ பார்த்தாயா?

விதூஷகன்:—ஆம்; அவர்களைக் கண்டேன்.

யௌகந்த:—ஓ! இரவு முடிந்தது; பொழுது புலர்கிறது.

அஹ: ஸமாப்த்யை நிஶா ப்ரதீக்ஷ்யதே
ஶீதே ப்ரபாதே திவஸோऽநுசிந்த்யதே ।
அநாகதாபந் ந்ருஶம்ஸாநி பஶ்யதாம்
கதம் கதம் காலமவேக்ஷ்ய நிர்வ்ருதி: ॥

பகலைக் கழித்து இரவு எதிர்பார்க்கப்படுகிறது; குளிர்ந்தகாலை நேரத்திற் பகலைப்பற்றி நினைக்கப்படுகிறது. இனி நிகழக்கூடிய கெடுதிகளை நோக்குகிறவர்களுக்குச் சென்றநாட்களை எண்ணுவதால் மனதுக்கு இன்பம் உண்டாகும்.

உருமண்வான்:—தாங்கள் நன்கு உரைத்தீர்கள்; இரவும் பகலும் ஒரேவிதமாய் இருந்தாலும், கஷ்டப்பட்டிருப்போர்க்கு இராக்காலமே மிகவும் கெடுதியுள்ளது. ஏனென்னில்,

வ்யவஹாரேஷ்வஸாபல்யாநாம் லோகேஷ்வபிரதாத்மநாம்।
வ்யாஹதே த்ருஷ்டதோஷாணாம் வைரிணாம் ரஜநீ பயம்॥

வியவஹாரங்களில் வெற்றியடையாதவர்களும், உலகத்திற் பற்றுள்ளவர்களும், விடியற்காலத்திற் பிறராற் குற்றங்களை அறியப்பட்டவர்களுமான பகைவர்களுக்கு இரவு அச்சம் விளைக்கக் கூடியதே.

யௌகந்த:—வஸந்தகனே! தலைவரிடம் தெரிவிக்கப்பட்டதா?

விதூஷகன்:—அவரே எனக்கு உத்திரவிட்டாரே! இன்று சதுர்த்தசியானதால் அவர் நீராடி விரதத்துடனிருக்கிறார்.

யௌகந்த:—அவர் நீராடினாரா?

விதூஷகன்:—ஆம் ஸ்நாநம் செய்தார்.

யௌகந்த:—தேவபூஜையும் முடித்தாரா?

விதூஷகன்:—ஆம்; நமஸ்காரத்தால்மட்டும் தேவபூஜை நடத்தப்பட்டது.

யௌகந்த:—தலைவர் இவ்விதமான நிலைமையை அடைந்திருக்கிறாரே!

ஸ்நாதஸ்ய யஸ்ய ஸவிதே(அ)த்ர ச தைவதஸ்ய
புண்யாஹகோஷவிரதௌ படஹா நதந்தி।
தஸ்யைவ கார்யவிபவாத் த்விபபந்தநேஷு
தைவப்ரணாசவிஹிதா நிகடா: ஸ்வநந்தி॥

எவர் நீராடித் தேவபூஜைமுடித்தபிறகு புண்யாஹவாசன காலத்தில் முன்பெல்லாம் பேரிவாத்தியம் முழங்குமோ—அவர் இப்போது தேவர்களைத் தொழுங்கால் அவருடைய காலக்கொடுமையாற் காற்கட்டுச்சங்கிலிகளே ஒலிக்கின்றன.

உருமண்வான்:—தங்களுடைய முயற்சியால் தலைவருக்குத் தகுதியானபடி திதிகளுக்குரிய மரியாதை செய்யப்படும்.

யௌகந்த:—வஸந்தக! நீ போய் மறுபடியும் தலைவரைக் காண்பாயாக. "பிரயாணத்தைக்குறித்துச் சொன்ன விஷயத்தில் நாளை அதைப் பிரயோகப்படுத்தவேண்டியகாலம். நீராடுதல் படுக்கை முதலியவைகளில் அவுஷதம் கொடுப்பதென்ற சாக்கினால், மந்திரத்துக்காகப் பச்சிலை கொணர்வதற்காகவே "நளகிரி" உபயோகப்படுத்தப்படுகிறது. அனுகூலமான காற்றினால் கமழும்படி தூபமிடப்பட்டது. பகைவருடைய யானையின் இறுமாப்பு ரோஷத்தால் வெல்லப்படக்கூடியதன்று. சமீபத்திலிருக்கிற யானைகளுக்கு அச்சம் உண்டாகுமாதலால், கிருகத்தில் தீ வைத்தல் நன்றன்று. யானைகளின்மனதைக் கலைப்பதற்காகச் சங்கும் பேரிவாத்தியங்களும் கோயில்களில் முழக்கப்படும். அந்த முழக்கத்தால் உபாயங்கள் எல்லாம் வீணாகிவிடுமாதலால், நாளை, தலைவருடைய கால்களில் பிரத்யோதனன் வீழ்வான்; அப்பொழுது தலைவர் பகைவருடைய அநுமதிகொண்டே கட்டிலிருந்து வெளியேறிக் 'கோஷவதி' என்ற வீணையையும் கைக்கொண்டு நளகிரியை வசப்படுத்துவார். பிறகு,

வெ நாஹி8-ீ நஸா நூவஜஜவ நஂகு்ுதாஜவெ வாரணஂ
ஸிஂஹா நாவேஸாவுூணவவிரூ0 த தவுூாஸவிஂயுஂ வநழ।
ணகாஹெவுஸெநவெநஸ நமரெ மதாதிுவண-ீஂ ஊஶாஂ
யெெநஷவிரஊ்ூ0நிய தஸெெநவநிவ-ீாஹுெத ॥

யானைக்குப்பின்னாலே சைன்யங்களை வேகமாய்த் தொடர்ந்து வரும்படி திட்டஞ்செய்தும், சிங்கங்கள் விழித்துக்கொண்டு முழக்கஞ்செய்யுமுன்னமே, விந்தியமலையை அடுத்த கானகத்தைக் கடந்தும் ஒரே பகலில் தம் நகரை அடையவேண்டும்; கபடயானையைக்கொண்டு பிடிக்கப்பட்ட அவர் (தலைவர்) யானையாலேயே தம்நகருக்குக் கொணரப்படுவார்" என்று அவரிடம் கூறுவாயாக.

உருமண்வான்:—வஸந்தக! இப்பொழுது நீ என்ன எண்ணுகிறாய்?

வஸந்தகன்:—இப் பெருமுயற்சி வீணாய்விடுமோவென்று.

இருவரும்:—பின்வரும் நிகழ்ச்சிகளை நாங்கள் அறிபவரல்ல.

விதூஷகன்:—நானும் தங்களைப்போன்றவனே.

யௌகந்த:—காரியம் கெடுவது எங்ஙனம்?

விதூஷகன்:—வத்ஸராஜனுடைய நடத்தையாலேயே.

யௌகந்த:—அது எப்படி?

விதூஷகன்:—கேட்கவேண்டும்.

இருவரும்:—நாங்கள் கவனத்துடன் இருக்கிறோம்.

விதூஷகன்:—சென்ற கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியன்று, அரசன் புதல்வியான வாஸவதத்தை தன் தோழியுடன் திரையில்லாத பல்லக்கில் ஏறி ராஜவீதியைக் கடந்து சிறைச்சாலைக்கு அருகிலிருக்கிற யக்ஷிணிபகவதி கோயிலில் தொழுவதற்காகச் சென்றிருந்தாள்.

இருவரும்:—பிறகு?

விதூஷகன்:—சிவிகைதாங்குகிறவர்கள் தோள்மாற்றிக்கொள்ளும்போது பல்லக்குச் சற்று நிறுத்தப்பட்டது. அச்சமயம் தலைவரால் வாஸவதத்தை நன்றாய்ப் பார்க்கப்பெற்றாள்.

யௌகந்த:—பிறகு?

விதூஷகன்:—பிறகு! பிறகு! என்ன? என்ன? என்று. சிறையையே பூங்காவனமாக நினைத்து அவர் காதலை வெளியிட்டார்.

யௌகந்த:—தலைவர் அவளிடம் உண்மையாகக் காதல்கொள்ளவில்லையே?

விதூஷகன்:—கூட்டத்தில் இருப்போர்க்கு இவ்விதமாகவே இன்னல் விளையும்.

யௌகந்த:—ஹே! உருமண்வானே! மனத்தைத் திடப்படுத்திக்கொள்வாயாக. இந்த வேஷத்துடனேயே கிழத்தனத்தைக் கடத்தவேண்டும்.

விதூஷகன்:—அவர் என்னிடம், "'யௌகந்தராயணரிடம், அவர்செய்துள்ள ஏற்பாடுகளை நான் விரும்பவில்லை. நாம் வெளியேறுவோமானால், பிரத்யோதனனுக்கு அவமானம் நிகழுவது திண்ணம். காமவேட்கை கொண்டவனென்று என்னை அவமதிக்க வேண்டாம். அவமானத்தை எவ்வாறு தொலைப்பதென்று ஆலோசிக்கிறேன்' என்று கூறுக" என்று சொன்னார்.

யௌகந்த:—ஓ! இதைக்கண்டு பகைவர்கள் சிரிப்பார்களே! அறிவு வெட்கத்தை இழந்ததே! நண்பர்கள் வருத்தம் அடைவார்களே! இடமும் சமயமும் தவறியிருக்குங்கால் தலைவருக்குக் காமம் உண்டாயிற்றே! ஏனெனில்,

ஶய்யாதலம் ஸ்வஹஸ்தரசிதா ஹஸ்தாக்ஷராம் ஶ்ருத்வா
வய பாடலோ ஶ்ரயஸ்ஸ ந ஷ்யாரண யோ: காதவ ஜோயம்பிதம் ।
க: ஶ்ரத்வா நஹ வெஜ்ய ஊநயஷடாம: ப்ருத்யக்ஷதோ ஷம்யதே
ரக்ஷாய ஸம் வரிரணத்யா நவாரரா ஷெ ராஜெதிஶஷாவ ந ॥

தன் கைகளாலே செய்யப்பட்ட வெறுந்தரையே கம்பளத்தை விரித்தால் உயர்வை அடையும். மன்மதனை அணுகுவதற்குக் கால் விலங்குகளின் ஒலியே போதுமானது; கட்டுப்பட்டிருப்பதைக் கண்கூடாக அறிந்தும், காவலர்களால் "அரசரே!" என்று கொண்டாடப்பெற்றால், எவன்தான் மதனாவேசங்கொள்ளமாட்டான்?

விதூஷகன்:—நட்பைக்காட்டினோம்; முயற்சியும் செய்தோம்; நல்லது, இவரை விட்டுவிட்டு நாம் செல்வோம்.

யௌகந்த:—நீ வஸந்தகன் அல்லனோ? வஸந்தக! அவ்வாறு வேண்டா வேண்டா.

வரித்யஜாஊ ஷம்தவம் ஷ:வெந ஊஷெநநவ ।
ஷாஹ்யஜ்ஜநஊவாஶ்ரித்ய ய: காயம் நாவஷாய்யதே ॥

அன்பர்கள் உதவக்கூடிய தக்ககாலத்தைக்கூடக் கருதாமல் துக்கத்தினாலும் மன்மதனாலும் துன்பம் அடைந்துள்ள அவரை, நாம் விட்டுப்போகலாமா?

விதூஷகன்:—இவ்வாறே கிழத்தனத்தை அடைவோம்.

யௌகந்த:—அதுவே மேலானது.

விதூஷகன்:—நாம் பட்டபாடுகளை உலகம் அறிந்தால், அது மேலானதே.

யௌகந்த:—நமக்கு உலகத்தைப் பற்றிப் பயன் ஒன்றுமில்லை; இந்தமுயற்சிகளெல்லாம் தலைவருக்குநன்மைசெய்யும்பொருட்டே.

விதூஷகன்:—அவைகளை அவர் அறியாரே!

யௌகந்த:—சமயத்தில் தெரிந்துகொள்வார்.

விதூஷகன்:—சமயம் எப்பொழுது நேரும்?

யௌகந்த:—நம்முடைய முயற்சிகள் பயன்படும்போது.

விதூஷகன்:—ஆதலால் நீவிர் ஊக்கத்துடன் சிறையிலிருந்து நமது அரசரையும் அந்தப்புரத்திலிருந்து இவ்வூரரசன் குமரியையும் வெளியிற் கொணர்வீராக.

உருமண்வான்:—நீவிர் இதைக் கவனிக்கவேண்டும்.

யௌகந்த:—இருவரையும் என்பது நல்லது; இது என்னுடைய இரண்டாவது உறுதி.

ஸுபத்ராமிவ காண்டீவீ நாக: பத்மலதாமிவ।
யதி தாம் ந ஹரேத்ராஜா நாஸ்மி யௌகந்தராயண: ॥

காண்டீபந்தரித்த அர்ஜுனன் சுபத்திரையைக்கொணர்ந்தது போலவும், பதுமலதையை நாகன் கொணர்ந்ததுபோலவும், அவளை அரசர் கொணராவிடில், நான் யௌகந்தராயணனல்லன். மேலும்,

யதி தாம் சைவ தம் சைவ தாம் சைவாயததோசனாம்।
நாஹராமி ந்ருபம் சைவ நாஸ்மி யௌகந்தராயண: ॥

"கோஷவதி" என்ற யாழையும், 'நளகிரி' என்ற யானையையும், நீண்டகண்களுள்ள அவளை(வாஸவதத்தையை)யும், அரசரையும் நான் மீட்டுக்கொணராவிடில் என்பெயர் யௌகந்தராயணன் அல்ல.

(செவிசாய்த்து)—ஓ! அரவங்கேட்கிறதே! என்னவென்று தெரிந்துவா.

விதூஷகன்:-ஓ! அவ்விதமே. (வெளியேசென்று மறுபடி புகுந்து) பொழுதுபுலர்ந்ததால் அங்குமிங்கும் அலேவதான மக்களுடைய கூட்டம் தெரிகிறது. இப்பொழுது நாம் என்னசெய்யலாம்?

உருமண்வான்.—அக்நிசாலே நான்குவாயில்கொண்டது. நமது கூட்டத்தைக் கலேப்போம்.

யௌகந்த:—இல்லே இல்லே; நமதுகூட்டம் கலேக்கமுடியாததே. பகைவர்களின் கூட்டம் கலேக்கப்படட்டும். (வெளியே செல்லல்)

பித்தன்:—சந்திரனே இராகு விழுங்குகிருன். சந்திரனே விட்டு விடு. விடாவிடில் உன்முகத்தையுடைத்து நானே விடுவிக்கிறேன். இந்தப் பொல்லாக்குதிரை நழுவி ஓடிவருகிறது. இதோ இதோ நாற்சந்தி வீதியில் (வருகிறது). நான் இதன்மீதேறிப் பலியைத் தின்பேன். இதோ இதோ குழந்தையைக் காப்போர்களே! என்னே அடியுங்கள்; என்னே அடிக்கவேண்டாம். என்ன சொல்லுகிருய்? நமக்கு நர்த்தனம் ஆடிக் காட்டுவாயா என்று? குழந்தைக்காவலர்காள்! காண்மின்! காண்மின்! கோல்கள்கொண்டு என்னே மறுபடியும் அடியுங்கள்; அடிக்கவேண்டா அடிக்கவேண்டா. ஆதலால் நானும் அடிக்கிறேன்.

(எல்லோரும் போதல்)

மூன்றுவது அங்கம் முற்றிற்று.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமி சாஸ்த்ரி, B.A., B.L.
மதுரை.

யவனர்வரலாறு

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். ந. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(கருக-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இரண்டாம்பினீசியயுத்தம்.

ஐபீரியதேசநிகழ்ச்சிகள்.

பகைப்படையாக மாறித் தீங்குவிளைத்த கூலிப்படையை அடக்கிய ஹமில்காரின் ஆற்றலையும் சிசிலித்தீவில் அவன் செய்த வீரச்செயல்களையும் மெச்சிய அரசாங்கசபையோர் ஹமில்காரைச் சேனைபதியாக்கி இராச்சியத்தைப் பெருக்கும்படி ஏவினார்கள். ஹமில்கார் ஆப்பிரிக்கா வனாந்தரத்தில் திரவியந்தேட இயலாதென உணர்ந்து ஐபீரியக்குடாநாட்டிற்குப் புறப்பட்டான். ஹமில்கார் கடல்கடந்து காடுகெடுத்து நாடாக்கி ஐபீரியப்புலையரை வீரராக்கி உரோமாபுரத்தை அழித்தற்கு எண்ணினான். கி. மு 237-ல் காடிஸ்துறையில் பாசறை யமைத்திருந்து அரசுசெலுத்தி கி. மு. 228-ஆம் ஆண்டு ஒரு போரில் மடிந்தான். ஹமில்காரின் மருகனும் துணைவனுமாகிய ஹஸ்துருபால் தன் மாமன்முயற்சியைத் தன் சிரமேற்கொண்டு ஐபீரியாவிலுள்ள பலநாடுகளையும் அடக்கிப் புதிய காதாக்கோ வென்னும் பட்டினத்தையும் அமைத்தான். அவன் புதிய காதாக்கோப் பட்டினத்தை அடுத்து ஒரு வெள்ளிச்சுரங்கம் அகழ்வித்தானாகை, உரோமர் அழுக்காறுற்று ஹஸ்துருபாலை வெருட்டினார்கள். வெருட்டவும் ஹஸ்துருபால் உரோமரைப் பொருட்படுத்தாமல் காதாக்கினியரின் ஆட்சியை ஐபீரியாவில் நிலை நாட்டினான். சாகுந்தத் துறைவோர் காதாக்கினியராகிய பினீசியருக்கு மாறாக உரோமரிடம் துணைவேண்டினார்கள். சாகுந்தத்திலுள்ளார் உரோமரோடு உறவுகொண்டாடினார்களாதலாலும், சாகுந்தம் இத்தாலிதேசத்திற்குக் கிட்டியதாதலாலும் உரோமர் அதைக் காத்தார்கள். கி. மு. 221-ல் ஹஸ்துருபாலை ஐபீரியன் ஒருவன் குத்திக்கொன்றான்.

ஹமில்காரின் மகன் ஹனிபால் 28 ஆண்டுநிரம்பிய இளைஞன். பாசறையிலிருந்து ஹமில்காரிடமும் ஹஸ்துருபாவிடமும் போர்முறைகளில் பழகினவனுகையால் படைவீரர் ஹனிபாலை நேசித்து அவன் தலைமையை எதிர்பார்த்திருந்தார்கள். அவன் பசி பிணி பனி முதலியவற்றை எள்ளளவும் பொருட்படுத்தவில்லை; எவ்வித இடையூற்றுக்கும் அஞ்சானுகி வீரச்செயல்களிற் சிறந்த தலைவனுக விளங்கினுன். ஹனிபாலின் வீரத்தையும் விவேகத்தையும் படைத்தலைமையையும் புகழாதாரில்லை. போர் நடாத்தலிலும் அரசியல்செலுத்தலிலும் அவன் ஒப்பாரும் மிக்காருமின்றித் தந்தை உவக்கத்தகுந்த மைந்தனுனுன். பண்டைக் காலத்துப் படைத்தலைவர் யாவரினும் ஹனிபாலே படைத்தலைமையிற் சிறந்தோனெனச் செப்பலாம். அலெச்சாந்தர் பெரிய வெற்றி வேந்தனுகித் தனிக்கோலோச்சினுனயினும் ஹனிபாலளவு வீரமும் நுட்பபுத்தியும் அறிவும் உடையவனில்லை யெனலாம். உரோமர் சிலர் அழுக்காறுகாரணமாக ஹனிபாலைக் கொடுங்கோலன் என்றும் கண்ணேட்டமில்லாதவ னென்றும் கூறினுர்கள். ஹனிபால் காட்சிக்கெளியன்; கடுஞ்சொல்லனல்லன் என்பதும் சாந்தகுணம் அருள் இரக்கம் முதலிய நற்குணங்கள் உடையோ னென்பதும் அவன் சொற்செயல்களால் இனிது புலப்படும். கி. மு. 218-ஆம் ஆண்டு ஹனிபால் சாகுந்தத்தைச் சூழ்ந்துநின்றுனுக, உரோமர் அவனைத் தடுத்தற்குத் தூதரை அவனிடம் அனுப்பினுர்கள். ஹனிபால் அத்தூதரை வரவேற்காது திருப்பினுன். உடனே உரோமர் காதாக்கோப்பட்டினத்தை ஆளுஞ் சபையினரிடம் பேவியஸ் என்னும் தூதனை அனுப்பினுர்கள். அச்சபை ஹனிபால் தவறிழைக்கவில்லை யெனத் தீர்மானித்தது. பேவியஸ் "சமாதானம் வேண்டுமோ, போர் வேண்டுமோ? விரும்பியதைக் கேண்மின்" என முழங்கினுனுக, "நீவிர் விரும்பியதைத் தருக" எனப் பினீசியர் ஆரவாரித்தனர் என்று இலிவியஸ் எழுதியுள்ளார். இக்கதை கட்டுரையே. காதாக்கினியர் பொருள்குன்றி இளைத்தகாலத்தில் செருக்குற்றிருந்தனர் என மொழிதல் பொருந்தாது. அன்றியும்

காதாக்கினியரின் ஆட்சிநாடுகள் உட்பகையுடையவாயிருந்தமை யால் காதாக்கினியர் கி. மு. 218-ல் போர்தொடங்க ஆயத்தமா யிருக்கவில்லை யெனத் துணியலாம்.

ஹனிபால் கிரேக்கவேந்தன் பிலிப்பை நட்பாக்கினன். கிரேக்க ரும் ஹனிபாலின் துணைபெறுதற்காகத் துணைசெய்ய உடன் பட்டார்கள். ஹனிபால் 20,000 ஐபீரியரை ஆப்பிரிக்கா நாட்டுக் காவலுக்கு வைத்தும் 15,000 ஆப்பிரிக்கரை ஐபீரியநாட்டுக் காவ லுக்கு வைத்தும் துணைப்படைக்கு ஒழுங்குசெய்தபின், 90,000 காலாட்படையும் 12,000 குதிரைப்படையும் 37 யானைப்படையும் கொண்டு கி. மு. 218-ல் மே மாதம் போருக்குப் புறப்பட்டான். ஐபீரியர் சிலர், பகையாக அவர்களை அடக்குவதற்குச் சிலபடையை நிறுத்தி, 50,000 காலாட்படையோடும் 9000 குதிரைப்படையோ டும் களிறுகளோடும் கல்லியநாடு புக்கான். இத்தாலிய தேசத்துக் கல்லியர் உரோமரோடு பகைத்திருந்தமையால் அவரது துணை யைப் பெறுதற்காகக் கடல்மார்க்கத்தைவிட்டுத் தரைவழியால் கல்லியநாட்டை அடைந்தான். இக்காலத்தில் பிரஞ்சுதேசமென வழங்கும் கல்லியநாட்டில் ஹனிபால் கானவரோடு பொருது அவருட் சிலரை நட்பினராக்கியும், தன் படைவீரரில் கோழை மக்களை நிற்கும்படி ஏவியும் றோன் நதியை விரைந்தடைந்தான். இதற்கிடையில் உரோமர் 24,000 காலாட்படையும் 1800 குதிரைப்படையும் சேர்த்தார்கள். இத்தாலியதேசத்துத் துணை நாடுகள், 40000 காலாட்படையும் 4400 குதிரைப்படையும் துணைப் படையாகச் சேர்த்தன. இணைத்தலைவர்களுள் செம்பிறோனி என் பவன் சிசிலித்தீவுக்கும் கோனீலியஸ் ஸ்கிப்பியோ என்பவன் ஐபீரியாவுக்கும் புறப்பட்டனர். கீழ்த்தலைவன் மான்லியஸ் கல்லிய ரோடு மியூற்றீனைக்களத்தில் பொருது தோல்வியடைந்தான். ஸ்கிப்பியோ அதைக் கேள்விப்பட்டு அவனுக்குத் துணைப்படை யனுப்பினன். பின்னர் ஹனிபால் றோன் நதியைக் கடந்தானெனக் கேட்டும் தனக்குக் குறிக்கப்பட்ட களம் ஐபீரியாவாகையால் மேன் மக்கட்சபையின் கட்டளையை மீறித்திரும்புதல் குற்றமாகக் கொள்ளப்படுமென எண்ணி ஐபீரியாநாட்டிலே நின்றான். ஹனி பால் இத்தாலிக்குட் புகுந்தானென அறிந்தபின்னர்த்தான் ஸ்கிப்பி யோ உரோமாபுரத்திற்குத் திரும்பினன்.

இது நிற்க, ஹனிபால் முன்னொருவரும் கடவாத அல்புமலை யைத் தாண்டினன். மலைவழியில் வீரர்பலரை இழந்தான். பிணியால் வீரர் பலர் இறந்தனர். களிறுகள் பல இறந்தன. காடு கடந்துழிப் படைவீரர்கள் பனியாலும் மலைவழிப் பருக்கைக்கற்களாலும் வருந்தினர். ஊக்கமுடையார்க்கு ஊன்றுகோல் வேண்டாவாதலின் ஹனிபால் மலைகடந்தான். எந்தக்கணவாயால் கடந்தானென நிச்சயமாகச் சொல்ல இயலாது. ஆசிரியர் பொலிபியஸ் என்பார் ஒரு வழியையும் இலிவியஸ் என்பார் பகைவருடைய சிறையிலிருந்த உரோமனொருவனிடம் கேட்டறிந்து வேறொரு வழியையும் தத்தம் வரலாற்றிற் குறிப்பிட்டனர். இரு ஆசிரியரும் ஹனிபால் ரூேன்நதியை அரோசியாவென்னும் இடத்திற் கடந்தான் எனக் கூறுகின்றனர். இலிவியஸ் எழுதிய வரலாற்றின்படி ஹனிபால் செனிவாக்குன்றின்வழியாலாவது, கெனிஸ்குன்றின் வழியாலாவது சென்றிருத்தல்வேண்டும் என்று அறியலாம். பொலிபியஸ் ஹனிபால் வந்தவழியைப்பற்றி விரிவாக எழுதவில்லை. கி. மு. 218-ல் ஸ்கிப்பியோ, ரிசினஸ் என்னும் சிற்றூற்றங்கரையில் நடந்த சிறுபோரில் தோற்றான். அப்பொழுதே ஹனிபாலின் போர் தொடங்கியது. ஹனிபாலும் தனது இத்தாலியப்போர்வரலாற்றை எழுதினனாகலின் அப் போர்வரலாறு ஒருபாற்கோடாது எழுதப்பட்டது. ஐபீரியாநாட்டில், ஸ்கிப்பியோ நடத்திய போர்வரலாறு உரோமரால்மாத்திரம் எழுதப்பட்டதாகையால் ஸ்கிப்பியோவைப் புகழ்ந்திருத்தல் இயல்பே.

ஹனிபாலின் வரவைக் கேள்வியுற்ற உரோமர்படை பிளாக்கெந்தியாவில் ஒளித்தது. ஹனிபால் கல்லியரிடம் துணைப்படை பெற்று உரோமர்படையைப் பின்தொடர்ந்தான்; டெரிபி ஆற்றுக் கரையில் ஸ்கிப்பியோவின்படையோடு பொருதான். தான் காயமுற்றிருந்தமையாலும், பினீசியப் புரவிப்படையைச் சமவெளியில் வெல்ல வியலாதாகலானும், ஸ்கிப்பியோ போர்புரியவிரும்பவில்லை. இணைத்தலைவருட் செம்பிரோனியஸ் போர்க்கெழும்படி உற்சாகப் படுத்தினனாகையால், உரோமர் போர்க்களத்துக்குச் சென்றனர். ஹனிபால் தனது தம்பி மாகோவைச் சில புரவிப்படையோடு ஒரு மறைவிடத்தில் ஒளித்திருக்கச்செய்து வேறொரு சிறிய புரவிப் படையைச் செம்பிரோனியஸை ஏமாற்றிப் பின்தொடரப்பண்ணும் படி வைகறையிற் செலுத்தினன். செம்பிரோனியஸ் என்னும் தலை

வனுக்கு இக்கபடம் புலப்படாமையால் சிறுபடையை இலகுவில் வெல்லலாமென எண்ணி அவன் பின்தொடர்ந்தான். உரோமர் உணவருந்தாமலும் பனிபெய்தலைப் பொருட்படுத்தாமலும் போருக்குச் சென்றனர். களத்தில்நின்ற பினீசியர்படை இருபதாயிரம் காலாட்படையும் பதினெண்ணுயிரம் புரவிப்படையும்; உரோமர்படை முப்பதாயிரம் காலாட்படையும் நாலாயிரம் புரவிப்படையும். சற்றுநேரம் வெற்றி தோல்வி தெரியாமல் கடும்போர் நிகழ்ந்தது. பத்தாயிரம் உரோமர் ஓடித் தப்பினுர்கள். செம்பிரோனியஸ் தன் தோல்வியை மேன்மக்கட்சபைக்கு அறிவியாதிருந்தனன். ஹனிபால் தென்னித்தாலியைத் தன் போர்க்களமாக்கும் நோக்கத்தோடு சென்முன்.

கி. மு. 217-ஆம் ஆண்டில் நடந்த தேர்தலிற் கமவியக்கத் தலைவன் பிளாமினியஸ் என்போனுடைய கட்சியாரும் மேன்மக்கட் கட்சியாரும் கலகப்பட்டார்கள். மினூசியஸ் தனித்தலைவனுகவும் பிளாமினியஸ் கீழ்மக்கட்டலைவனுகவும் நியமிக்கப்பட்டாராக, ஒரு எலி கீச்சிட்டபடியால் தேர்தல் முறையல்லாததெனத் தீர்க்கப்பட்டது. இரண்டாம்முறை நடந்த தேர்தலில் பிளாமினியஸ் இணைத் தலைவருள் ஒருவனுனுன். பலதுர்நிமித்தங்களை நிமித்திகர் கூறவும் பொதுமக்கள் பிளாமினியஸையே தலைவனுகத் தெரிந்தெடுத்தனர். மேன்மக்கள் யாதேனும் குற்றஞ்சொல்லிக் குழப்பஞ்செய்வரென வெண்ணிப் பிளாமினியஸ் தான் தெரிந்தெடுக்கப்படுமுன்னரே அரிமியத்திற்குப்போனுன். தலைவனுக நியமிக்கப்பட்டபின் அவன் அறெற்றியத்தில் ஒரு சதுப்புநிலத்திற் பாசறையமைத்தான். படைவீரர் துயிலாது வருந்தினர். ஹனிபாலின் படைவீரரும் வருந்தினுர்கள். ஹனிபால் ஒருகண் பார்வையிழந்தான். உரோமாபுரத்தைக் காத்தற்குப் பிளாமினியஸ் பின்தொடர்வானென்றெண்ணி ஹனிபால் முன்சென்று இரசிமீனஸ் ஏரிக்கரையில் அவனை எதிர்பார்த்திருந்தான். காடடர்ந்த இருகுன்றுகளுக்கிடையில் உள்ளதோர் ஒடுக்கமானபாதையால் பிளாமினியஸ் செல்லநேர்ந்தது. ஹனிபால் குன்றின்கண் தன் படைவீரரை மறைத்துவைத்துப் பிளாமினியஸின் படையை அவ்வழியிடைப் புகவிட்டுப் பொறியிற் பிடித்தாற்போல அகப்படுத்தினுன். பினீசியப்படைவீரர் நான்குபக்கமுஞ்சூழ்ந்துநின்று உரோமர்படையில் ஒருவரையும் தப்பவிடாமல் கொன்றுர்கள். 15000 உரோமர் மாண்டார்

கள், 15000 பேர் சிறைப்பட்டனர்; பினீசியப்படைவீரரில் 1500 வீரர்மாத்திரம் கொல்லப்பட்டார்கள். உரோமர்தலைவன் பிளாமினியஸ் போரில் துஞ்சினான். மற்ற இணைத்தலைவன் சேவியஸ் ஓடித்தப்பினான்.

பேவியஸ்.

ஒருதலைவன் இறந்தமையாலும் மற்றைத்தலைவன் எவ்விடம் இருக்கிறானெனத் தெரியாமையாலும் மேன்மக்கள்கூடிப் பேவியஸ் என்பவனைத் தனித்தலைவனாகநியமித்தனர். ஹனிபால் உரோமாபுரத்தை முற்றுகையிடுதற்கு வேண்டிய தோமரம்,கிடுகு முதலிய படைகளில்லாமையால் தென்னித்தாலிக்குச் சென்று ஆறியிருந்தான். பேவியஸ் ஹனிபாலின்பின் தொடர்ந்து திரிந்து நாள்கடத்தும் முறையைத் தழுவினான். பேவியஸுக்குக் கோபமூட்டிப் போர்புரியப்பண்ணுவித்தற்காகக் கம்பேனியநாட்டூர்களை ஹனிபால் தீயிட்டான். ஊர்கள் அழற்படுதலைக் கண்டும் பேவியஸ் போர் செய்யப்படாதெனத் தன்கீழ்த்தலைவர்க்குக் கற்பித்தான். இங்ஙனம் பேவியஸ் ஹனிபாலின் பின்தொடர்ந்தும் ஹனிபால் போர்க்கு எத்தனிக்க முதுகிட்டும்பின்பு பின்தொடர்ந்தும் காலத்தைக் கழித்தானாகையால், காலங்கடத்துவோன் என்னும் பட்டத்தைப்பெற்றான். ஹனிபால் ஆப்பூலியாவுக்குச்செல்லும் வழியில் ஒரு பள்ளத்தாக்கில் அவனை அகப்படுத்தலாமெனஎண்ணிப் பேவியஸ் விரைந்தான். ஹனிபால் இதையுணர்ந்து தப்புதற்கு உபாயத்தை யோசித்தான். ஹனிபால் 2000 எருதுகளின் கொம்பில் எரியும் சூழ்ந்துகளைக் கட்டித் தூரத்திலுைகப் பேவியஸ் பினீசியப்படை விரைந்து செல்கின்றதென எண்ணிப் பின்தொடர்ந்தான். பேவியஸ் இச்சூதை உணருமுன் ஹனிபால் அப்பள்ளத்தாக்கினின்றும் அகன்று விலகினான். இதன்பின் பேவியஸ் ஹனிபாலைப் பின்தொடர்ந்தால் அவன்சூழ்ச்சியில் அகப்படவேண்டுமென அஞ்சிப் பாசறையில் தங்கினான்.

ஆப்பூலியா நாட்டில் தானியம் சேகரிக்கப்பட்டிருந்தமையால் ஹனிபால் கூதிர்காலத்தை அங்காட்டிற் கழித்தான். பேவியஸ் பெரும்போர் செய்யாது சிறுபடைகளைச் சந்தித்தவழிப் பொருது காலம்போக்குதலை அறிந்த மேன்மக்கட்சபையினர் அவனை வெறுக்கத்தொடங்கினார்கள். பேவியஸ் கீழ்மக்கட்டலைவன் மினூசியஸ்

என்போனிடம் படையை ஒப்புவித்துவிட்டு உரோமாபுரத்திற்குக் கிரியை ஒன்று செய்யப்போனான். மினூசியஸ் ஹனிபாலின் சிறுபடையொன்றோடு பொருது வென்றானாகையால் மேன்மக்கள் மினூசியனைப் பேவியஸோடு இணைத்தலைவனாக்கினார்கள். பேவியஸ் சினந்து படையை இரண்டாகப்பிரித்தான். வெவ்வேறு பாசறையில் இருதலைவரும் இருந்தமையால் தலைவர் கலகப்பட்டாரென ஹனிபால் ஊகித்தறிந்து, மினூசியஸ் என்னும் தலைவனை முறியப் புடைக்கநினைத்துப் போர்க்கெழுந்தான். போரில் மினூசியஸ் தோற்பதைக்கண்டு பேவியஸ் உதவிபுரிந்து படையைக் காப்பாற்றினான். உடனே மினூசியஸ் போர்த்துறைத் தலைமையைத் துறந்து கீழ்த்தலைவனானான்.

கன்னாயித் தோல்வி.

கி. மு. 216-ஆம்ஆண்டு உரோமர் பெருஞ்சேனை திரட்டினார்கள். வாரோவும் அமீலியஸ்போலஸும் இணைத்தலைவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். மேன்மக்கட்சபையார் ஹனிபாலை எதிர்த்துப் போர்செய்யும்படி கட்டளையிட்டனர். அமிலியஸ் போலஸ் 50,000 வீரரோடுசென்று கன்னாயிக்களத்திற் பகைவனைச் சந்தித்தான். ஹனிபாலும் மூவகைத்தானையோடும் போர்க்களத்தில் நின்றான். நடுவில் காலாட்படையும் ஒருசார் உரோமருடைய குதிரைப்படையும் ஒருசார் துணைநாட்டுக் குதிரைப்படையுமாக உரோமர்படை அணிவகுக்கப்பட்டது. ஹனிபால் ஆப்புமுனையாகக் கல்லியர் வேற்படையை முன்னணியாக நிறுத்திக் கல்லியர் குதிரைப்படையை இடத்திலும் ஆபிரிக்கக்குதிரைப்படையை வலத்திலும் நிறுத்தினான். உரோமர்குதிரைப்படை தோற்று ஓடியதாயினும், உரோமர் காலாட்படை கல்லியர்படையை நெருக்கிற்று. ஆப்பிரிக்கக்குதிரைப்படை உரோமர்குதிரைப்படையைக் கலைத்துப் பின்பக்கத்தாற் பெயர்ந்து உரோமர்காலாட்படையைச் சூழ்ந்தது. இவ்வண்ணம் உரோமர் தம் பகைவர்நடுவில் அகப்பட்டனர். பினீசியர் நாலுபக்கத்திலும் உரோமரை வளைத்துக் கொன்றனர். 10000 வீரரும் வாரோத்தலைவனும் ஓடித் தப்பினார்கள். 20000 உரோமர் சிறைப்பட்டனர். பெருந்தொகையான மக்கள் இறந்தனர். 80 மேன்மக்களும் துஞ்சினார்கள். அமீலியஸ் போலஸ்,

என்னும் தலைவனும் இறந்தான். பினீசியப் படையில் 6000 காலாட் படையும் 200 குதிரைப்படையும் அழிந்தன. கன்னுயிப் பெரும் போரில் உரோமர்படை முழுவதும் அழிவெய்திற்று எனக் கூறலாம்.

இணைத்தலைவன் ஒருவன் இறந்ததும் கீழ்த்தலைவர்கள் பலர் மாண்டதும் மேன்மக்கட்சபையின் தொகை குறைந்தது. தமது சரித்திரத்தில் கன்னுயிக்களத்தில் தோல்வியடைந்ததுபோலத் தாம் ஒருமுறையும் தோல்வியடையவில்லையென உரோமர் ஆராஞ் ருற்றுக் கலங்கினுர்கள். உரோமாபுரத்தோர் தமது முடிவுகாலம் கிட்டியதெனப் புலம்பினர். துணுக்குற்ற சனங்கள் வீதிகளில் கூட்டங்கூட்டமாக நின்றனர். இங்ஙனம் நகரவாசிகள் யாவரும் துயர்க்கடலில் மூழ்கினர். பெண்கள் வீதிதோறும் அழுது திரிந் தனர். லத்தீனியர் துணைப்படை அனுப்பினமையாலும் இத்தாலி தேசமுழுவதும் பரம்பிய உரோமர்குடிகளும் துணைபுரிந்தமையா லும் உரோமர் தேறி யுத்தத்தைநடத்தற்குத் துணிந்தனர். பேபி யஸ் பெரியோனிடம் புத்திகேட்க, அவன் யாவரையும் அஞ்சன் மின் எனத் தேற்றிப் பெண்களை இல்லங்களுக்குச் செல்லும்படி கற்பித்து 8000 அடிமைகளைப் படைவீரராக்கிச் சிறையிலிருந்து 6000 தீவினையாளரையும் விடுதலைசெய்து ஒருபடையாக்கி யூனி யஸ்பேரா என்பவனைத் தலைவனுகநியமித்துப் போர்கடத்தும்முறை யைத் தழுவும்படி ஏவினுன்.

ஹனிபால் தனது தம்பி மாகோவை வெற்றிகளை அறிவித் துப் படைசேர்த்துவரும்படி காதாக்கோப்பட்டினத்துக்கு அனுப் பினுன். ஹனிபால் உரோமாபுரியை நோக்காமல் சிறுநகரங்களை ஒவ்வொன்ருக முற்றுகையிட்டுக் கைப்பற்றினுன். மாகர் பால் என்னும் இளைஞன் தான் தலைவனுயின் இவ்வளவில் உரோமாபுரத் தில் வெற்றிக்கொடியை நாட்டியிருப்பேன் என வீரங்கூறினுன். ஹனிபால் அவனுடைய அறியாமையை இகழ்ந்து நகைத்தான். உரோமாபுரியின் மதில்களையும் அரண்களையும் தாக்குதற்கு அடு படைகளும் தடுபடைகளும் துணைக்கருவிகளும் பெருந்தொகை யான காலாட்படையும் நெடுங்காலத்திற்குவேண்டும் உணவும் இல்லாமையால் ஹனிபால் தென்னித்தாலிய நகரங்களைத் துணை

யாக்க முயன்றான். சம்நிதியரும் லுக்கேனியரும் கேணிக்கியரும் உரோமருக்கு எதிராக எழுந்து பினீசியருக்குத் துணைபுரிந்தனர். ஹனிபால் கி. மு. 216-ல் தென்னிதாலியநாட்டுப் பெருநகரான கப்புவாநகரை முற்றுகைசெய்து கைப்பற்றினான்.

கி. மு. 215-ல் பேவியஸ், கிறுக்கஸ் என்போர் இணைத்தலைவராயினர். கிறுக்கஸ் கன்னேவின் சிறுபடையை வென்றான். அடுத்தவாண்டு கன்னே வெனவங்தத்தில் தோற்றான். கி.மு.213-ல் ஹனிபால் இராறங்தப்புறஞ்சேரியில் தங்கினான். வேந்தன் பிலிப்பு அப்போலானுவில் உரோமரோடு பொருது தோற்றுனைகயால் பினீசியருக்குத் துணையொன்றும் செய்யாதிருந்தான். இத்தருணத்தில் கல்லியரும், எற்றூறியரும் உரோமருக்கு விரோதமாயெழுந்தனர்.

சிசிலியில் போர் கி. மு. 214—210.

உரோமருடைய நண்பன் ஹயிரோ, உரோமர் போரில் தோல்வியடைந்ததையறிந்து வேற்படைகளும் விற்படைகளும் துணைப்படைகளாக அனுப்பினான். தன் குடிகளுக்கு மிடிநிகழுங் காலத்து உதவிசெய்து செங்கோல்செலுத்தினான். உரோட்டுத்தீவு பூகம்பத்தால் அனுருற்றதாக ஹயிரோ அத்தீவாருக்குப் பொருளுதவிசெய்தான். கலைவல்லுநரையும் ஆராய்ச்சிவல்லுநரையும் ஆதரித்து அறிஞர்புரவலன் எனப் புகழ்பெற்றான். அவன் வயதுமுதிர்ந்து கி. மு. 214-ல் இறந்தான். அவனுடைய பேரன் அரசுரிமையைப் பெற்றான். சிசிலிமுழுவதையும் அவனுக்கு அளிப்பதாகப் பினீசியர் வாக்குத்தத்தஞ்செய்தனர். அவன் உரோமரோடு பகைத்துப் பினீசியரோடு நட்பாயினன். சிறுக்கூசாப்பட்டினத்தோர் உரோமர்கட்சியாராகித் தம் வேந்தனைக் கொன்றனர். பின்னர் எப்பிசிடிஸ், கிப்பொக்கிறிற்றிஸ் என்னும் இரு பினீசியத்தலைவர்கள் தலைநகரில் தலைமைபெற்று உரோமரோடு போர்நடாத்தினார்கள். மேன்மக்கட்சபை மாக்கேலஸ் என்னும் தலைவனைச் சிசிலியில் யுத்தம்செய்யும்படி கட்டளையிட்டது. சிறுக்கூசாப்பட்டினம் ஒருபக்கத்தில் கடலால் காக்கப்பட்டது. ஏனைய பக்கங்களில் நகர் அகழியாலும் மதிலாலும் காக்கப்பட்டிருந்தது.

கணிதவல்லுநன் ஆர்க்கிமிடிஸ் பல யந்திரங்களையும் பொறிகளையும் மதிலின்மீது அமைத்தான். இடங்கணிப்பொறி கணையமரம் முதலியவற்றால் தரைப்பக்கமதில்களைக் காத்தான். கடல்முகத்தில் தூண்டிலும்தொடக்கும் வைத்துக்கப்பல்களை அணுகவொட்டாது காத்தான். தூண்டிற்பொறிகள் கப்பல்களைக் கொளுவித் தூக்கிக் கடலில் ஆழ்த்தியமையால் உரோமக்கடல்வீரர் ஒரு கயிற்றைக் கண்டாலுமே அஞ்சி ஓடினார்கள். மாக்கேலஸ் பட்டினத்தை அணுக அஞ்சிச் சூழ்ந்திருந்தான். எப்பிசிடிஸ் பினீசியரிடம் 25000 வேற்படையும் 3000 குதிரைப்படையும் பெற்று நகரக்கட்சிகளை அடக்கி ஆண்டனன். கிப்போக்கிறிற்றிஸ் 10000 படையோடு புறப்பட்டுக் கிமில்கோவுக்குச் சென்றான். நகரத்தோர் ஒருவிழாக் கொண்டாடியகாலமறிந்து மாக்கேலஸ் ஏணிகள்வைத்து மதின்மீதேறினான். பினீசியப்படை நோயால் வருந்திக் குன்றியதாக, எப்பிசிடிஸ் அக்கிரிக்கந்தத்துக்குச் சென்றான். சிருக்கூசாவில் தலைவர் இல்லாமையால் கலகம் விளைந்தது.

மாக்கேலஸ் நகரத்து அரண்களை ஒவ்வொன்றாய்ப் பற்றி நகருட்சென்று நகரத்தோரைக் கொன்றான். கணிதவல்லுநன் ஆர்க்கிமிடிஸ் என்போனும் கொல்லப்பட்டான். படைவீரர் நகரெங்கும் உலாவிச் சூறைகொண்டனர். சித்திரங்கள் சிலைகள் கலன்கள் அணிகள் முதலிய பொருள் யாவற்றையும் உரோமர் கொள்ளை கொண்டுபோனார்கள். சிருக்குசாப்பட்டினம் சீர்கெட்டழிந்தது.

அக்கிரிக்கந்தத்தில் பினீசியத்தலைவன் முயிற்றினீஸ் உரோமரொடு பொருது வென்றான். கி. மு. 210-ல் முயற்றினீஸ் கன்னோவோடு சேர்ந்து உரோமரைப் பின்னரும் புடைத்தான். பினீசியத்தலைவர் ஒருவரில் ஒருவர் அழுக்காறுற்றுப் பிரிய, அக்கிரிக்கந்தமும் உரோமர்கைப்பட்டது. இவ்வண்ணம் சிசிலியில் உரோமர் தமது ஆட்சியை நிலைநாட்டினார்கள்.

[தொடரும்.]

ஸ்ரீ:

மதிப்புரை.

ஸ்ரீ அழகியசிங்கர் அருண்மொழியும் சதாபிஷேகமலரும்:—

இது, ஸ்ரீ அஹோபிலமடத்து ஆஸ்தானத்தின் நாற்பத்தொன்றாவது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கிற ஸ்ரீவண்சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய சதாபிஷேக மஹோத்ஸவக்கொண்டாட்டத்தில் வெளியிடப் பெற்றது.

இதில் அந்தஸ்வாமி சாதித்தருளிய திவ்யஸூக்திகளும், மற்றும், வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லுநர்களான சிறந்த பல பண்டிதர்கள் கெத்ய பத்ய ரூபங்களாயெழுதியுள்ள பிரபந்தங்களும் பொருளுரை புகழுரைகளும், அந்தந்தச் சந்தர்ப்பானுகுணமாயமைந்த படிமக்கலன்களும் உள்ளன; அவை ஸ்ரீ அழகியசிங்கரின் ப்ரபாவங்களை வெளியிடுவதுடன், பகவத்பக்தியையும் ஆசாரியபக்தியையும் வளர்க்கத்தக்கன.

இத்தகைய மலர்கள் வெளியிடுவதால் அவ்வத்தக்கோர்களது நல்லறத்தின் இம்மைப்பயனாகிய புகழ் நிலைபெறுதலும், தத்தம் சமயக்கோட்பாடுகளுறுதிப்படுதலும், பலருமறியாத பலவிஷயங்களறியப்படுதலும், பொருளுரை புகழுரை வரையும்பண்டிதர்களுக்குப் பிரஸித்தியுண்டாதலும், கல்விவளர்ச்சிக்கு உதவியாதலும், சரித்திரமெழுதுதற்குச் சான்றாதலும் முதலாகிய பல பயன்கள் உண்டாகற்பாலன.

கலைமகள்:—இது, தன்பெயருக்கியையப் பலகலைத்துறையும் பற்றி மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் ஸ்ரீ. உ. வே, சாமிநாதையரவர்கள் முதலிய தமிழ்ப்பேரறிஞராலும் பிறமொழிப்புலவராலும் எழுதப்பெறும் அரிய பெரிய பொருளுரைகளும், சித்திரபத்திரங்களும் உடையதாய் யாவரும் விரும்பிப்படிக்கும்படி நல்ல காகிதத்தில் திருத்தமாக அச்சிட்டு மாதந்தோறும் வெளியிடப்படுவது. பல சிறந்த தமிழ்நூல்களை அநுபந்தமாக வெளியிட்டுவருவது. தமிழ்வளர்ச்சிக்குதவுவது. தமிழ்

வளர்ச்சியிற்கருத்துடைய அறிஞர்பலராலும் ஆதரிக்கப்பெற்றது. இது, மேலும் சிறந்து நீடுநிலைபெறுமாறு இதனைத் தமிழ்மக்கள் பேணிக்கொள்வார்களென்று நம்புகிறோம். இதில் 12 தொகுதிகள் முற்றுப்பெற்றுள்ளன. 13-ஆம் தொகுதி இப்பொழுது நடைபெற்றுவருகிறது.

இதன் வருடச்சந்தா தபாற்செலவுடன் இந்தியா சிலோன் இரண்டுக்கும் ரூபா நான்கு. பர்மா, பினங்கு, சிங்கப்பூர், நேட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூ 6. தனிப்பிரதி அணா 6. வேண்டுவோர்: 'மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரை:—இது, யாழ்ப்பாணத்துக் காரைநகர்ப்பண்டிதர் சு. அருளம்பலம் அவர்களால் எழுதப்பட்டது. பத்துப்பாட்டில் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படைப் பொருளைப் பாணர்வரலாறு முதலிய பல தலைப்பின்கீழ் விரித்து விளக்க எழுந்தது. பல அறிஞருவந்துதவிய பாயிரமும் மதிப்புரையும் உடையது. இதன் விலை ரூபா. 1—25. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப்பெறலாம்.

டால்ஸ்டாய் சிறுகதைகள் (முதற்பாகம்):—இது, வீரவநல்லூர் ஹிந்து ஸெகண்டரி பாடசாலை உதவியாசிரியர் திரு. M. S. சுப்பிரமணிய ஐயரவர்களால் எழுதப்பெற்றது; ருஷியாதேசத்துப் பேரறிஞரான டால்ஸ்டாய் எழுதிய கதைகளுள் ஆறு சிறுகதைகளின் தமிழ்மொழிபெயர்ப்பாயுள்ளது. அரியகருத்துக்களை எளிய இனிய நடையில் நம்நாட்டுக் கிசைந்தமுறையில் வெளியிடுவது. சிறுவர்களுக்குப் பாடமாக வைக்கத்தக்கது. இதன்விலை அணா 6. வேண்டுவோர்: 'எம். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள், சுந்தரராஜப் பெருமாள் சந்நிதித்தெரு, வீரவநல்லூர். (S.I.R.)' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

வெள்ளிவிழாத் திருநாள்.

[க]

பேரன்புடையீர்,

இச்சங்கம், பல ஆண்டுகளாகத் தமிழ்மொழியின் முன்னேற்றங்கருதி ஆற்றும் பணியைத் தாங்கள் ஒருவாறு அறிந்திருக்கக் கூடும். இதன் வெள்ளிவிழா, வருகின்ற வெகுதானிய ஆண்டு சித்திரை ௩, ௪, ௫, (15, 16, 17—4—1938) ஆம் நாட்களாகும் வெள்ளி-சனி-ஞாயிறுகளில் திருப்பாதிரிப்புலியூர் சைவத்திரு. சிவசண்முகமெய்ஞ்ஞானசிவாச்சாரியதேசிகசுவாமிகளது சீரிய தலைமையில் கொண்டாடப்பெறும்.

அதுபோது, 'தனித்தமிழ்ப்புலவர்கல்லூரி'த் திறப்பும், 'தமிழ் இசை'யரங்கும், தமிழ்நாடகமும் தக்கவர்களால் நடைபெறும். இன்னும் தமிழ்ப்பேராசிரியர்களால் சிறந்த சொற்பொழிவுகள் நிகழும்.

மற்றும், விழாவின் மலராக, 'கரந்தைக் கட்டுரை' என்ற ஒரு நூல், தமிழ்நாட்டுப் பேரறிவாளர் நாற்பதின்மருக்குக் குறையாதவர்களது ஆராய்ச்சிக் கட்டுரைகளோடு, 'பெதர் ஒயிட்' கடிதத்தில் 'சுருய' பக்கங்கட்குக் குறையாமல் (ரூபா மூன்று விலையில்) வெளியிடப்படும்.

விழாவின் விவரங்கள் பின்னர் நாள்தாள்களில் வெளியிடப்படும்.

வேண்டுகோள்:—

'முனிவரும் முன்னுவ பொன்னால் முடியும்' என்னும் முதுமொழியை அறிவீர்கள். எமது விழா சிறக்கவும், தமிழ்க் கல்லூரி வளனுறவும் இன்றியமையாத பொருளுதவி வேண்டியிருத்தலால், தமிழன்பர்கள் தத்தமாலியன்ற தொகையினை 'மணி ஆர்டர்'செய்து உடனே அனுப்புமாறு வேண்டுகிறேன்.

விழாவிற்கு வருங்காலையிலாதல் நன்கொடைத் தொகைகளைத் தந்தும், சங்கத்தின் உறுப்பினராகியும், தமிழ்ப்பொழிலின் சந்தா நேயராகியும் இயன்றவாறெல்லாம் துணைபுரியவும் வேண்டுமென விண்ணப்பிக்கின்றேன்.

தஞ்சாவூர்,
21—3—1938.

த. வே. உமாமகேசுவரன்,
சங்கத்தலைவர்.

வெள்ளிவிழாவின்போது கீழ்க்கண்ட நூல்கள் விலைக்குக்கிடைக்கும்:—

1. தொல்காப்பியம்—தெய்வச்சிலையார் உரை விலை ... ரூ. 2-0-0
2. தமிழ்ப்பொழில்—ஆண்டுத் தொகுப்பு.
   அட்டைக் கட்டடம் விலை ... ரூ. 2-4-0
   கலிக்கா கட்டடம் விலை ... ரூ. 2-8-0
3. கரந்தைக் கட்டுரை விலை ... ரூ. 3-0-0

[உ]

கரந்தைத் தமிழ்ச்சங்கம்,
தஞ்சை, 1-4-1938.

பெருமைமிக்க ஐயன்மீர்!

நலம். நமது கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் வெள்ளிவிழா 1938, ஏப்ரல் 15, 16, 17 தேதிகளில், உயர்திரு. திருப்பாதிரிப்புலியூர் அடிகளது, சீரிய தலைமையில் நடைபெறுகின்றது. அதுபோது, சிறந்த தமிழ்ப்புலவர்களின் சொற்பொழிவுகளுடன், இசையரங்கும், நாடக அரங்கும் நடைபெறும்.

'கரந்தைக் கட்டுரை' எனும் சங்கத்தின் வெள்ளிவிழா நினைவு மலர் 450 பக்கங்கட்குக் குறையாத அளவில் வெளிவருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் வித்துவான் தேர்வுக்கு மாணவர்களைப் பயிற்றவும், இசை, மருத்துவம் போன்ற கவின்கலை, தொழிற்கலைகளைப் பயிற்றவும் ஏற்ற கல்லூரி தொடங்கப்பெறும்.

விழாவின் செலவிற்கு ரூ. 3,000-மும், கல்லூரியின் செலவிற்கு ஆண்டுதோறும் ரூ. 5,000-மும் ஆகுமென மதிக்கின்றேன்.

தங்கள் அன்புகெழுமிய ஆதரவினால் இந் நன்முயற்சி வளம் பெறவேண்டியிருத்தலால், தங்கள் பரந்த உள்ளத்தைப்போன்ற பெருந்தொகையை நன்கொடையாகத் தந்து துணைசெய்யுமாறு மிகவும் வேண்டுகின்றேன்.

விழாவிற்கு வந்து, மூன்றுநாட்களும் உடனிருந்து சிறப்பிக்குமாறும் விண்ணப்பிக்கின்றேன்.

தமிழ்த்தொண்டன்,
தஞ்சை, 1—4—38
த. வே. உமாமகேசுவரன்,
தலைவர்.

உ

கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

வெள்ளிவிழா.

---

[௩]

அன்புள்ள ஐயா,

தமிழ்த்தாயின் தண்ணருளால், நமது சங்கத்தின் வெள்ளி விழா, நிகழும் வெகுதானிய, சித்திரை, ௩, ௪, ௫, (1938, எப்ரல், 15, 16, 17) ஆம் நாட்களில், நமது சங்கக் கட்டிடத்தில். திருப்பாதிரிப்புலியூர், உயர்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞானசிவாச்சாரியசுவாமிகள் தலைமையில் பிற்காணும் நிகழ்ச்சிக் குறிப்பிற் கண்டபடி நடைபெறவிருக்கின்றது.

தாங்கள் தமருடன் வந்திருந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

தங்கள் அன்புள்ள,
க. த. சங்கம், தஞ்சாவூர், 1—4—38.
த. வே. உமாமகேசுவரன்,
சங்கத்தலைவர்.

இடையிடையே, இன்னிசைப் பாடல்களும், திருமறையும் ஓதப்பெறும்.

முதல்நாள், வெள்ளிக்கிழமை

(15—4—38)

காலை

மணி

க. 8—30 கடவுள்வணக்கம்

உ. 8—35 தமிழ்த்தெய்வவணக்கம்

௩. 8—40 வரவேற்பு—சங்கத்தலைவர்

ச. 8—50 அறிக்கை படித்தல்—அமைச்சர்

ரு. 9—10 தலைவரவர்கள் முன்னுரை

மாலை

க. 3— 0 வணக்கம்

உ. 3—10 கல்லூரிமாணவர்கட்குப் பரிசுவழங்கல்

௩. 3—30 தமிழ்மொழியை வளர்த்தற்குரிய வழிகள்
திரு. C. பன்னிருகைப்பெருமாள்முதலியாரவர்கள் M. A. B. L., திருவனந்தபுரம்.

ச. 4—30 தமிழர் ஒழுக்க அடிப்படையறங்கள்
திரு. S. சோமசுந்தரபாரதியாரவர்கள், M. A. B. L., தமிழ்ப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

ரு. 5—30 தலைவரவர்கள் முடிப்புரை.

சா. 6—30 வாழ்த்து.

இரவு

8— 0 தமிழ்நாடகம் 'திருநாளைப்போவார்'
குமாரகானசபையார், தஞ்சாவூர்.

———

இரண்டாவது நாள், சனிக்கிழமை
(16—4—38)

காலை

மணி

க. 8—30 கடவுள்வணக்கம்

உ. 8—35 தமிழ்த்தெய்வவணக்கம்

ந. 8—40 கரந்தைத் தமிழ்க்கல்லூரி (Tamil College) திறப்பு திரு. S. சச்சிதானந்தம்பிள்ளையவர்கள் B. A. L. T., கல்வித்தலைவர், தென்னாற்காடு.

ச. 9—40 பெரியோர்களின் வாழ்த்துரை.

மாலை

க. 3— 0 வணக்கம்

உ. 3—10 சுந்தரர் செந்தமிழ்
திரு. பண்டித. ந மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள், விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

ந. 4—10 திருநாவீறுடையபிரானும், தெய்வத்தமிழ்மறையும் திரு. வே. ஆழ்வார் இராமானுசநாயகியார் அவர்கள், பாரதநாட்டுத் திருமாலடியார் திருப்பெருமன்றத் தலைவர், வேலூர்.

ச. 5—10 சிலப்பதிகாரச் சுவைநலம்
திரு. பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியார் அவர்கள், விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ரு. 6—10 தலைவரவர்கள் முடிப்புரை.

சா. 6—55 வாழ்த்து.

இரவு

8— 0 தமிழ் இசையரங்கு.
திரு. இசைத்தமிழ்ச் செல்வர் T. இலக்குமணப் பிள்ளை அவர்களும், அவர்கள் மாணவர்களும், திருவனந்தபுரம்.

மூன்றாவதுநாள், ஞாயிற்றுக்கிழமை

(17—4—38)

காலை

மணி		
க.	8— 0	கடவுள்வணக்கம்
உ.	8— 5	தமிழ்த்தெய்வவணக்கம்
ங.	8—10	நூல் அரங்கேற்றல் 'தமிழரசி குறவஞ்சி' திரு. ஆசிரியர் அ. வரதநஞ்சையபிள்ளை அவர்கள், தோரமங்கலம்.
ச.	10—10	திருக்குறள்—பரிதியுரை துடிசைகிழார், திரு. அ. சிதம்பரனார் அவர்கள்.
ரு.	10—25	சேக்கிழார் உவமக்கவின் திரு. பெருஞ்சொல்விளக்கனார், மு. சரவணமுதலியார் அவர்கள்.

மாலை

க.	3— 0	வணக்கம்
உ.	3—10	மூர்த்திநாயனார் திரு. C. K. சுப்பிரமணியமுதலியார் அவர்கள், B. A., வழக்கறிஞர், கோயமுத்தூர்.
ங.	4—10	வல்லரசும் நல்லமைச்சும் திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள், B. A. B. L., தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக்கழகம்.
ச.	5—10	தலைவரவர்கள் முடிப்புரை.
ரு.	6—15	நன்றிகூறல்.
சு.	6—50	வாழ்த்து.

இரவு

	8— 0	தமிழ்நாடகம், 'கரிகாலன்' கரந்தைத்தமிழ்ச்சங்கக்கல்லூரிமாணவர்.

2562 கலைகள் யாவையு மீந்தசாந் திபன்கட வுளர்க்குத்
தலைவ தெக்கணை தருகெனத் தக்கதே தென்ன
வலையுள் புக்கவென் மைந்தரைத் தருகென வவற்கன்
றலைவின் மைந்தரை யுதவினன் மூவரா மொருவன். (உசு)

2563 விசைய னெவ்வமு மருங்கற விசையவெந் தேர்மேல்
வசையில் வைதிகன் றன்னொடு மவனொடும் வான்புக்
கசைவின் மைந்தரை யடையவு மவ்வவ பருவத்
திசைய வுய்த்தனன் றேவகி வயின்வரு மிளையோன். (உஎ)

2564 தம்மு னுக்குமுன் பிறந்தவ ரறுவரைத் தாய்மார்க்
கம்ம னைக்கனப் பிலந்தனிற் புகுந்துகொண் டளித்தான்
கைம்ம லர்த்திகி ரியிற்றடுத் ததுகரி யாக்க
வம்ம லர்ப்பதத் தினின்மழ வாக்கிய வமலன். (உஅ)

2565 பவஞ்செய் வல்வினை புறந்தர வறநெறி பயிற்றுந்
தவஞ்செய் வார்களே தம்முயிர்க் குறுதிரூஉம் சால்பார்
அவஞ்செய் வார்கண்மற் றவரெனு மாதலா லரிதா
நவஞ்செய் நாரணற் பணிகுவம் யாமென நவின்றான். (உகூ)

2566 இருக்குறுங்குடி மறையவர் குலம்புகுந் திறைஞ்சுந்
திருக்குறுங்குடிப் பரமன்முன் றவம்புரி திறத்தான்
முருக்குறுங்குடி கொண்டவாய் மொய்யிழாய் நமதுள்
ளுருக்குறுங்குடி மதலையைத் தருமென வுரைத்தான். (௩0)

வேறு.

2567 விருந்தொடு மிசைந்து மினியவை மொழிந்து
மேதக வொழுக்கமும் பொறையும்
பொருந்தலு மழுக்கா றுடன்புறன் பழித்தல்
பொருந்திடா தேனைமூ வருக்கும்
மருந்துட னுணவு முறையுளு மியற்றி
வசையுறு தில்லறத் திருந்தான்
அருந்தவப் படிவம் புணர்தலு மெழுந்தா
னறனொரு படிவமுற் றதென. (௩க)

வேறு.

2568 நஞ்சூட் டியவேல் விழியிணைக்கு
நயந்தஞ் சனமூட் டுதன்முதலா
மஞ்சூட் டியமென் கருங்குழற்கு
மலரூட்டுதலு மலரடிச்செம்
பஞ்சூட் டுதலுங் கிளிக்கமிர்தம்
பரிந்தூட் டுதலு மறந்திறைவ
னஞ்சூட் டெகின நடைச்சிலைத்
தடிவைத் துடனே கினளன்றே. (௩௨)

வேறு.

2569 காதநான் கவையோர் கடிகையிற் கழிவன்
கரிபரி தேரொடுஞ் சிவிகை
யாதகா தவத்திற் கெனக்கொணர்ந் தவரோ
டறைந்தபின் பவர்பணிந் திட்ட
பாதகாப் பெனுநன் மாவடி தனையும்
பழித்துயர் பதாதிசூழ் தரவே
மாதயா விளைடும் பரலடுத் துயர்ந்த
வன்கடத் தினுநடந் தனரே. (௩௩)

வேறு.

2570 ஏகம் பயிலுந் துணைநலத்தோ
டேகும் விருப்போ புதல்வரில்லா
மோகம் பயில வருந்தவமே
முயன்ற விருப்போ திருமகட
ளுகம் பயிலும் புயல்புரிந்த
வருளின் சிறப்போ வறிகிலந்தீ
வேகம் பயிலுஞ் சுரமடிக்கீழ்
விரைமென் மலர்போற் குளிர்ந்தனவே. (௩௪)

வேறு.

2571 காதலுட் கலந்த விருவர்பொன் னடியுங்
காயமுங் கடுங்கதிர் வெதுப்பக்
கேதமுய்த் திலகற் பிளைடுமெய் யுணர்வைக்
கிட்டுகி லவைசுடு மெனவோ

பூதல மலரி யெனும்பெயர் தமக்குப்
புலவர்முன் வாய்மையாக் குதற்கோ
யாதென வறியேன் மலரின்மேன் மிதித்துற்
றெழுவபோற் குளிர்மையுய்த் தனவே. (௫௫)

2572 காத்தினு லியக்கு மொருசா வீதி
காவத மெனக்கரு துதலும்
வரத்தினர் தமரி னெடும்படர் பொழுதின்
மலர்மகள் கொழுநனே யுரைசால்
பரத்துவ மெனக்கற் றுணர்ந்தமுக் கோற்கைப்
பகவர்வந் தெதிர்தலு முரவோன்
சிரத்தினை வணக்கிக் கரத்தினைக் குவித்தச்
செல்வர்பொன் னடியிணைச் சேர்ந்தான். (௫௬)

2573 மடந்தையும் வணங்கு கெனவணங் கியபின்
மலர்க்கைவாய் புதைத்திடா நிற்பத்
திடம்பயில் பனுவற் றொகைமுழு துணர்ந்தோர்
செல்வநீ யிவளொடுந் தழல்வன்
கடந்தனிற் படர்ந்த தெவனெனத் தமது
கருத்தினை யுணர்த்தலுங் கால
மடங்கலு முணர்ந்தோ ரிறைவனங் கவர்பா
லருள்புரி வதன்றிற முணர்ந்தே. (௫௭)

2574 அண்ணனீ யுலகத் தருந்ததி யெனவே
யமைந்தகற் புடையநங் கையொடு
மெண்ணமே தகமெய்த் தவமுயல் வதனு
லெண்ணிலா மன்னுயிர்க் குயிராங்
கண்ணனைக் கமலை கொழுநனை நுமது
கவின்பெறு மதலையாய்ப் பெறுதல்
திண்ணமா மெனலு மாசிகூ றினராய்ச்
செல்கெனச் செல்வரும் படர்ந்தார். (௫௮)

வேறு.

2575 பெறுக பெரியோ ருரையெனுமப்
பேறுற் றனமாற் புதல்வனையே
யுறுவ துறுதி யெனக்குறிப்புற்
றுவகைப் பெருக்காற் றிடையமுந்திச்

சிறுகு மருங்குற் பெருகுமுலைச்
செய்ய கனிவாய்க் கரியகுழன்
மறுவில் பெருங்கற் புடன்சிறந்த
மடந்தை யுடனுட் களிகொண்டே. (௩௯)

2576 வீட்டா றடைதற் கறத்தாறு
விழைந்த விமலன் றமரினெடுங்
காட்டா றனைத்துங் கடந்துபசுங்
கமுக மிடற்றுக் களியளிதா
மீட்டா றலைக்கு மதுக்கருவி
யிழிய மலங்கு குதித்தெழுநீர்
நாட்டா றயற்பூ வுடைந்துகுதே
னுன்று குதிக்கும் பொழிலடைந்தான். (௪0)

2577 முருந்து முகையும் புரையெயிற்று
முகுள முலைச்செங் குவளைவிழி
மருந்தி னினிதா மழலைமொழி
மடந்தை வருத்த மகற்றுதற்கு
கிருந்து தமரோ டமுதமருந்
தியபி னெழுந்து விரைசையெனப்
பொருந்து திருப்பாற் கடலெனப்பார்
புகழ்தண் டுறையின் மருங்கணைந்தான். (௪௧)

2578 கூன்பாய் முசுவின் குலம்பலவின்
கொழும்பொற் சுளைதோய்த் திடக்குழிசுந்
தேன்பாய் தலும்வாய் மடுத்தவராற்
றிரள்பாய் தலும்வெண் மதிதவழும்
வான்பாய் பொழிற்பூ முகையுடைந்து
வழிந்த நறவ மறுகுதொறுந்
தான்பாய் தலும்வெள் ளிதழ்க்கமலத்
தடம்பாய் தலுங்கண் டுளமகிழ்ந்தார். (௪௨)

2579 அரம்பைக் கனியுங் கொழும்பலவி
னழிந்த சுளையு முதிர்ந்துநிரந்
தரம்பைத் தெழுதண் பொழிற்புறத்திற்
றவழ்ந்து வளைநித் திலஞ்சொரியுங்

குராம்பிற் களிவண் டினமுரலுங்
கொய்பூந் துறையிற் குளிர்கழனி
வரம்பிற் றிரிவா ரடியிழுக்கும்
வளங்காண் டலுமுட் களிகொண்டார். (சங)

2580 மன்றற் கடிநாண் மலர்த்தவிசின்
வளர்மென் சிறக ரனப்பெடையோ
டொன்றப் புணர்ந்த துணைச்சேவ
லுடலங் குழையா குலம்பெயர்ப்பான்
றென்றற் குழவி தவழ்கமுகின்
செழும்பா ளைமணங் கமழுமணற்
குன்றத் திடைவீற் றிருப்பதையுட்
கொண்டா ரழகு குடிகொண்டார். (சச)

2581 பொன்னங் கமல மலர்த்தவிசிற்
புணர்ந்த பெடையைத் தணந்துசிறை
யன்னந் துழனி யுடன்கழனி
யார லகடா ரவுமயின்ற
பின்னங் கலகுட் கொளுங்கயலைப்
பெடைவா யளிப்பச் சிறிதருந்தித்
தன்னன் புறப்பார்ப் பருத்தியகண்
ணளிகாண் டலுஞ்சஞ் சலமுற்றார். (சரு)

2582 பூவிற் சிறந்த செழுங்கமலப்
பொய்கை யகத்தாய் நெய்தலைநா
நீவிப் பகுவாய் மடுத்தகடு
நிறைத்து மனைக்கன் றுள்ளிநடை
காவிற் படர்நன் கபிலைமுலைக்
கண்கள் சொரிபா னதியினுடன்
மேவித் திருப்பாற் கடலெனும்பேர்
மெய்யே யெனக்கண் களிகொண்டார். (சசா)

2583 வானுட் கழிய வளர்பொழிற்கண்
மதிக்கோ டுழவண் டினமிழைத்த
தேனுட் கழிய வளர்நறவுஞ்
சிதைந்தங் கழியச் சிறகரனங்

தானுட் களிதண் ணளியினெடுந்
தன்பார்ப் பினுக்குத் தனதலகா
லானுட் கழிவெள் வளையின்முகந்
தூட்டு மதுகண் டுளமகிழ்ந்தார். (சஎ)

2584 தீம்பா லொடுதெண் ணறைவிரவுந்
திரைநீர்ப் பெருக்கி னிரைகவரத்
தாம்பாய்ந் தலையின் வழியொழுகித்
தண்ணந் துறைசேர் பெடைநனைவு
போம்பான் மையிற்றென் றலிற்சிறகர்
புலர்த்து மெகினத் துணைச்சேவன்
மேம்பா டினைக்கண் டுணர்வினுற
விழைந்தா ருடலங் குழைந்தாரே. (சஅ)

வேறு.

2585 சுழித்தெழு தரங்கம் வலம்புரிக் குலங்கள்
சூலுளைந் தெழுந்துபைந் தடத்தைக்
கழித்துயர் நதியுட் பூசலிட் டீன்ற
கதிர்விரி நித்திலக் குவையைக்
கொழித்தெறி தலொடுங் கரையின்மா மணியைக்
கொள்ளைகொண் டிடைவிடா தெறிந்து
தெழித்தலிற் சிந்து நதியெனும் பெயருந்
திடமெனக் குறித்தெழுந் தனரே. (சகூ)

2586 உரைகுலா முதன்மைப் பதினொரு கோடி
யுருத்திரர் தவமுயன் றதெனத்
திரைகுலாம் புவன மொருவகை கிளத்துந்
திறத்தவாய்ப் பகிரதி நிகர்க்குங்
கரைகுலாஞ் சிந்து நதித்துறைத் திருப்பாற்
கடற்படிந் தெழுந்தனன் செழுந்தா
மரைகுலா முகுள முலைத்துவ ரிதழ்க்கோ
மளமடத் தகையொடு முரவோன். (ரும0)

2587 பாணிழைத் திமிர்வண் டுளர்தொறும் விசும்பைப்
பந்தர்பா ரித்தெழு பொழில்கள்
சேணிழைத் தொளிர்பன் மலருதிர்த் ததரிற்
றெகிழ்திறஞ் செழும்பொன்னூல் வயிரத்

தூணிழைத் ததெனத் திரண்டெழு வுறழ்தோட்
டுணையொடு நிழலெனத் தொடர்ந்த
மாணிழை தளிர்மெல் லடிக்கயர் வுயிர்ப்பான்
மலர்ப்படாம் விரித்ததே மானும். (ருக)

2588 சந்தமா மரப்பூம் பணைநெடு விசும்பைத்
தடவிவெண் மதியக டுழுது
சிந்துமா ரமுதத் தலர்ந்தபூந் தாது
சேறுபட் டிழிவதை முகந்து
கொந்துலாங் களபத் துணைமுலைக் கயற்கட்
கோதைமே னியிற்றவழ்ந் துலாய
மந்தமா ருதஞ்செந் தமிழெனத் தமிழ்த்த
வடிவமே வருடுவ மானும். (ருஉ)

2589 மோதுபாற் றரங்கத் தடங்கடற் பிறந்து
முகுந்தன்மார் பகங்குடி புகுந்த
காதலாள் வனப்பைப் பொருவரு துணைச்செங்
கயற்கண்ணு ளியங்கிரு மருங்கு
மீதுலாந் தென்றற் கொருங்குதாழ் சினைத்தே
மென்றுணர் மறுகியா டுறுதன்
மாதர்வாண் முகத்து வருத்தமே யகற்றி
மலர்த்தவீ சுவதென லாமால். (ருரு)

2590 வங்கவா ரிதியுட் படுத்ததெள் ளமுதம்
வடிவெடுத் தியங்குவ தெனலாந்
திங்கள்போற் சிறந்த வதனமா திநெடுந்
திசைதிசை சிறகர்வண் டிரைக்குங்
குங்குமப் பொழிலுங் கமுகிநெண் பொழிலுங்
குடக்கனிப் பலவிநெண் பொழிலுந்
தெங்கிநெண் பொழிலுஞ் சண்பகப் பொழிலுந்
திகழ்திருக் குறுங்குடி யடைந்தார். (ருச)

வேறு.

2591 இதுவைகுண்ட வாழ்வுநல்கு முயர்குருங்கை யாகும்வைக
லினும்வசந்த நீடு மொய்கொள்கா
விதுவயங்கொணூலர்மெய்கொண்மறைவளம்பராவியெய்து
மிடமிதன் புலாய் செய்கையாய்

இதுபதங்கன் வாசிவைகி யெழுகலிஞ்சி வாசமல்கு
மிதுகரண்ட மாடு பொய்கைகாண்
இதுகிடந்த மாயன்வைக லிஃதிருந்த மாயன்வைக
லிதுவுநின்ற மாயன் வைகலே. (ருரு)

வேறு.

2592 என்று தானம்பா வையும்வலம் புரிதொறு மிளையோன்
மன்ற லங்குழன் மடந்தையோ டுரைத்திடா வளர்பொற்
குன்ற மாளிகைத் திருக்குறுங் குடியிலெங் கோனை
நின்று போற்றினர் புதல்வனைப் பெறுதிற நினைந்தே. ()

2593 போற்றி போற்றியென் றவுணன்முன் னீண்டபொன் மேனி
தோற்றி யிக்குறுங் குடியினு ளடங்குநன் சுடரே
யாற்ற லங்களி றழைத்தநா ளடுகரா வறவெங்
கூற்ற மன்னவைந் நுதித்திகி ரியைவிடுங் குழகா. (ருஎ)

2594 தனுது புன்மையை வெளியிடத் தலையொடுந் தவக்குற்
றினுது கொண்டா னிரப்பினைத் தவிர்த்தியென் றிரப்ப
மனுது வந்தவ னிரப்பினைத் தவிர்த்தவாய் மையினு
னினுது தத்துவ நினைப்பதற் கெளியதோ நிமலா. (ருஅ)

2595 போதுள் வைகிய திடத்தனும் பொருப்புயிர்த் தவளா
மாது வைகுமெய் யிடத்தனு மன்னுயிர்க் கணத்தைக்
காது வல்வினை புரிதொறுங் காத்திலை யெனிலிங்
கேது செய்தவ ரின்னணங் காப்பவ ரிறைவா. (ருக)

2596 அதிதி யென்றொரு பெயர்புனைந் தொருபதோ டைந்தாய்
மதிதி திக்குதி மதிமுக மடந்தைநன் மகவா
யுதிதி திக்குற ளாயவா வெமக்குன தடியே
கதிதி தித்தியென் றாவின்மே னடனவில் கண்ணா. (சுo)

வேறு.

2597 காண்டகுமா மணிமுடியுங் கண்ணிணையுங்
குண்டலமுங் காதுங் காமர்
ஆண்டகையாங் குருங்கேசன் றிருமுகமுஞ்
செங்கனிவா யழகுந் தோளும்

பூண்டகைய திருமார்பும் பீதகவா
டையுமருங்கும் புவனந் தாவி
நீண்டபொன்மே னியுந்துணைத்தா மரையடியு
நினைபவர்க்கு நிகருண் டாமோ. (சுக)

2598 கூற்றிருக்குந் துணைநயனப் பசுங்கிளியை
யிமயமடக் குயிலைச் செந்தே
னூற்றிருக்குந் தளையவிழ்பூங் குழலுமையை
யொருபாகத் துட்கொள் விண்மே
னேற்றிருக்கும் பிறைமுடித்த சடையானு
மின்றளவு நின்று போற்ற
வீற்றிருக்குங் குருங்கேசன் றிறம்புகழ்வார்
தமக்கிணையார் மிக்கார் யாரே. (சுஉ)

2599 விதிகாணும் பகிரண்ட மனைத்தினையும்
விழுங்கியநீர் வேலை மீதோ
ரெதிகாணும் படிதுயின்ற வாலிலைநீத்
தரவணைமே லிப்பார் மீது
பதிகாள முகில்கிடந்த தெனக்கிடந்த
நம்பிமுகப் பதும மான
மதிகாணுந் தொறுங்குவிகைத் தாமரைபெற்
றேற்குலகின் மாறுண் டாமே. (சுரு)

வேறு.

2600 பூத விநோத நம்பி கோதம னார்மடந்தை
பூதல மேல்விழுந்த துயரேதீர்
பாத விநோத நம்பி பூமகண் மேவுநம்பி
பார்மகண் மேவுநம்பி துறவோர்சேர்
வேத விநோத நம்பி யாடக னுயிருண்ட
வீர விநோதநம்பி குழல்வாய்வேய்
நாத விநோத நம்பி சீர்புகழ் வாய்மையன்பர்
நானில மீதுவந்து பிறவாரே. (சுச)

வேறு.

2601 மழைக்கண்மா ரிக்கிறும்பு குடைக்கொள்கா குத்தனென்றும்
வளர்த்துவாழ் வித்தநம்பி யுயர்வானோர்
தழைத்தகா வைக்கொணர்ந்து வளைக்கைமா திற்புரந்து
சகத்தைவாழ் வித்தநம்பி பனைபோனீள்
புழைக்கைமால் வெற்புவஞ்ச மிடற்கரா மிக்குநொந்த
பொருட்டின்மே தக்கமுந்து பெயர்கூறு
வழைத்துவாழ் வித்தநம்பி பதத்தைநே சித்தவன்பர்
அகத்துளாண் மிக்ககஞ்ச மலராளே. (சுரு)

வேறு.

2602 நறவுக்க தண்டுளப நாண்மாலை நம்பி
பிறவிக் கொடிய பிணிக்குமருந் தென்பார்
பிறவிக் கொடிய பிணிக்குமருந் தென்று
றுறவுற் றுணர்வுறவுட் கொள்ளாருட் கொள்ளாரே. (சுசு)

2603 காதற் பிறவிக் கடற்குக் குருங்கேசன்
றீதற் றருள்புரியுஞ் சேமப் புணையென்பார்
றீதற் றருள்புரியுஞ் சேமப் புணையென்றுற்
பாதத் திணையுறக்கை பற்றார்கைப் பற்றாரே. (சுஎ)

2604 பேதம் பயில்பிறவிப் பேரிருணீர் வான்சுடரா
நாதன் குருங்கா புரிநா ரணனென்பார்
நாதன் குருங்கா புரிநா ரணனென்றுற்
போதந் தழைந்துதினம் போற்றாரென் போற்றாரே. (சுஅ)

இவை மூன்றும் தேவபாணி.

வேறு

2605 நிரந்தரம் புனலுண் மூழ்கி மலர்கடுய் நினைவி னீங்கா
வரந்தரு கவெனு மாயோன் குணத்தையின் னணந்தாம் வாழ்த்து
முரம்பயின் றனரா யோர்போ துப்பிலிப் புற்கை யுள்ளங்
கரம்பயி லளவு மாந்திக் களிதக நோற்கு நாளில். (சுகூ)

2606 வண்டிமிர் பதுமக் கோதை மார்பினும் புவனக் கோதை
திண்டிறற் புயத்து நீங்காச் சிறப்புறக் கனவி னுங்கண்
புண்டரீ கங்கள் பூத்த புயலொரு பொருப்பிற் றோன்றக்
கண்டதோன் றெனலாம் வண்ணங் கலுழன்மேற் றோன்றி னனே.

வேறு.

2607 முற்றவஞ்சேர் நுமர்வழிக்கிங் குமையொழிந்த
வெழுவர்தலை முறைக்கோர் மைந்தற்
பெற்றெடுப்ப விதியுளது பினைமைந்தற்
பெறுவிதியும் பேசி லின்றால்
நற்றவநீ ரிசைந்ததற்கிங் கினிமைந்தற்
பெறுதிறமே நவிலின் மும்மை
யுற்றவுகங் கழிந்துகலி யுகமெனநா
லாமுகமொன் றுதிக்கு நாளில். (எக)

2608 கோதார்ந்த குணத்தினெடுங் குரவரையு
மிகழ்ந்தறமுங் குடிபோய்வையந்
தீதார்ந்து வருமிடுக்கண் டுறந்துயிர்க
ளீடேறச் சேட ராசன்
தாதார்ந்த மலர்ப்புளிக்கா வணமாகப்
பழம்பதிவாழ் தமருண் ஞான
வேதாந்த மதுரகவி யெனக் கலுழன்
விரைந்தெழுதும் விருப்பின் மாதோ. (எஉ)

2609 பொற்புடைநான் மறைத்தமிழின் பாடலினு
ணுகம்மைப் புகழுந் தோற்ற
முற்றிடவுற் றனமதனை நுமர்வழிக்கு
மதலையென வுதிப்பே மென்னக்
கற்றைமலர்க் குழலுடைய நங்கையுங்கா
ரியும்விழித்துக் கனவின் வாய்மை
தெற்றெனவுற் றுயர்வரம்பெற் றனராய்மெய்
புளகிதங்கூர் திறத்த ரானார். (எங)

இவை மூன்றுந் தொடர்.

வேறு.

2610 அமலா பிரியா விடையிமையோர்க்
கத்தா பிரியா விடையெமையாள்
விமலா பிரியா விடையிடுக்கண்
வென்றாய் பிரியா விடையருள்கூர்

நிமலா பிரியா விடையழியா
நித்தா பிரியா விடைகொழும்பொற்
கமலா சனத்தாள் புணர்மார்பா
கண்ணு பிரியா விடையென்றார். (எச)

வேறு.

2611 பூவரமங் கைக்குமணி மார்பளித்தும்
புவிமகட்குப் புயத்தை யீந்தும்
மாவரமங் கைக்கொண்ட மாவலிபான்
மூவடிமண் வாங்கு நீரான்
காவரமங் கையர்பதியைந் தருவினெடும்
வாவியெழுங் காட்சி மேய
சீவரமங் கையில்வான மாமலையை
யருட்கடலைத் தெரிசித் தாரே. (எரு)

வேறு.

2612 தெய்வநா யகனே போற்றி செழுமலர்த் தவிசிற் றோன்றுந்
தையனு யகனே போற்றி சங்குசக் கரத்தாய் போற்றி
வையமீ ரேழும் போற்றும் வானவர் முதுவற் றந்த
வையனே போற்றி யென்னு வெழுந்தன ரறிவின் மிக்கார்.

2613 ஒருகைமேற் சங்க மேந்தி யுலம்பொரு வலப்பாற் கொற்றந்
தருகைமேற் றிகிரி யேந்துந் தனிப்பெருங் கடவுளாய
முருகைவான்சிறைவண்டுண்டுமுரல்பசுந்துளபமாயோன்
குருகைமா நகரஞ் சேர்ந்தார் குணவத முழுதுஞ் சேர்ந்தார்.

வேறு.

2614 கவர்க்கும் பொறிவழி கலக்கும் புலன்வலி
கடக்கும் புலனுறவே
தவத்தின் பொறைபுரி பவர்க்கன் றியுமொரு
தவப்பண் பிலரெனலாம்

எவர்க்குங் கதிதரு திருச்சங் கணிதுறை
யினிற்றண் புனல்படியா
நவப்பங் கயமலர் மகட்கன் புறுகொழு
நனைச்சென் றடிதொழுதார். (எஅ)

வேறு.

2615 பாதி மாமதி யம்புனை வேணி யான்மழு வொன்றிய
பாணி யானய னென்பவனால்
வீதி தோறு மிரந்துழல் சாப மேவிய வெண்டலை
வீழ வேர்வையெ றிந்தருள்கூர்
நீதி யான்மறை யென்பது மாதியோடுத னந்தமு
நேச நீடரி யென்பதனு
லாதி நாத பரம்பர வாதி நாரண சுந்தர
வாதி யாருனை யன்றியுமே. (எகூ)

வேறு.

2616 அரந்தை யொன்றிய ஞானமொ டழிந்த சிந்தையர் நாதனு
மமைந்த பண்பில ருயிர்போய்
வரம்பெ றும்பெரு வாழ்வில விருந்தி வண்பெறல் வீடென
மடந்த ழைந்தெதிர் கூறுவரே
புரந்த ரன்சிவ னன்முக னலந்த ழைந்த சொரூபொடு
பொருந்து மொண்பொனி...........
நிரந்த ரந்திரு மாதொடு பொலிந்து நின்ற பிரானென
நினைந்து நின்பெயர் கூறவுமே. (அ0)

வேறு.

2617 முக்கண் ணனுக்கு மாயிர மெய்க்கண் ணனுக்கு மாதவ
முற்ற வேபற்று நாலிருகூ
றக்கண் ணனுக்கு நீதொழி விட்ட காலத்து ளாயவ
ரத்த னதிச்செய் காரணனு

மிக்க வாதிப் பிரானெனன மிக்க காவற்கு மேவலின்
மிக்க ஞாலத் துளா யுறைவோர்
தக்க தாயத் தகாதது பக்க மேகத் தயாவுறு
தற்ப ராகிற் பராவுதுமே. (அக)

வேறு.

2618 அன்ற வாதிப் பிதாமக னென்று பாகிக் கலாமதி
யன்றி வேணிக்க ணறணி பவனோடே
பொன்ற வாதிக்கு நீருல கொன்ற வேமுற்று போழ்துயிர்
பொன்றி டாகித்த னாகியு மதன்மீதே
நின்ற வாதிப் பிரானென நின்ற காலத் தியாவையும்
நின்ற யாவுய்த்த காவலி னருளேகூர்
நன்றி நாடப் பெறாதது கொன்ற மூடத் துரோகிக
ணன்றி நாடப் பெறாதறி வழிவாரே. (அஉ)

வேறு.

2619 நீதிப் புராணமறை போதித்த போதமறை
நேசித்த கேள்வியவை வழியாயே
சோதிச் சொருபசுக ரூபத்த ராகியொளிர்
சோபைப்பொன் வீடுதனி......
....
....
....
....

ஸ்ரீ:

ஒரு குறிப்பு.

மாறனலங்கார நூலாசிரியரான திருக்குருகைப்பெருமாள்கவிராயரால் இயற்றப்பெற்ற பாரகாவியமான குருகைமான்மியம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் உள்ளதோரேட்டுச்சுவடியையும் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் அன்புடனுதவிய ஏட்டுச்சுவடியொன்றையும் கொண்டு பரிசோதித்துச் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிடப்பெற்று வருகிறது.

இது, கடவுள்வாழ்த்தும் பதிகமும் நாடுவாழ்த்துச்சருக்க முதல் மவுனநீங்குசருக்கம் இறுதியாக 28 சருக்கங்களும் உடையதாக இயற்றப்பட்டதென்று பின்வரும் (ஐயரவர்கள் ஏட்டின் முகப்பிற் சேர்க்கப்பட்டுள்ள) அட்டவணையால் தெரிகிறது.

சருக்கத்தட்டவணை.

1		கடவுள்வாழ்த்து	கவி	3
2		பதிகம்	,,	17
3	(1)	நாடுவாழ்த்துச்சருக்கம்	,,	133
4	(2)	புறநகர்வாழ்த்துச்சருக்கம்	,,	138
5	(3)	அகநகர்வாழ்த்துச்சருக்கம்	,,	215
6	(4)	கோயில்வருணனைச்சருக்கம்	,,	109
7	(5)	கெந்தமாதன வருணனைச்சருக்கம்	,,	87
8	(6)	பரமபதவருணனைச்சருக்கம்	,,	165
9	(7)	அண்ட(கோச)வுற்பத்திச்சருக்கம்	,,	218
10	(8)	மார்க்கண்டேயன் தோத்திரச்சருக்கம்	,,	52
11	(9)	பிரமனருந்தவச்சருக்கம்	,,	48
12	(10)	பிரமன்சோத்திரச்சருக்கம்	,,	48
13	(11)	தானங்காட்டுசருக்கம்	,,	45
14	(12)	திருவாராதனைச்சருக்கம்	,,	105
15	(13)	வேடவருணனைச்சருக்கம்	,,	73
16	(14)	வேழவருணனைச்சருக்கம்	,,	63

17 (15)	துணைப்படை வதைப்படுசருக்கம்	,,	9[illegible]
18 (16)	வேடனும் வேழமும் வதைப்படுசருக்கம்	,,	11[illegible]
19 (17)	தாந்தன் முத்திபெற்றசருக்கம்	,,	10[illegible]
20 (18)	சங்கன் முத்திபெற்றசருக்கம்	,,	20[illegible]
21 (19)	மாடத்திருக்குருகூர்ச்சருக்கம்	,,	121
22 (20)	திருமுடியடைவுச்சருக்கம்	,,	22
23 (21)	பெண்பேசுசருக்கம்	,,	40
24 (22)	எழுச்சிச்சருக்கம்	,,	81
25 (23)	திருமணச்சருக்கம்	,,	121
26 (24)	மீட்சிச்சருக்கம்	,,	47
27 (25)	இல்வாழ்க்கைச்சருக்கம்	,,	69
28 (26)	வரம்பெறுசருக்கம்	,,	88
29 (27)	மாறன்திருவவதாரச்சருக்கம்	,,	83
30 (28)	மவுனம்நீங்குசருக்கம்	,,	324
		ஆகக்கவி—	3030

இவற்றுள் சங்கத்தேட்டுப்பிரதி 19-வது மாடத்திருக்குருகூர்ச் சருக்கத்து 118-ஆம் செய்யுள்வரையுமே யுள்ளது. ஐயரவர்கள்பிரதி 26-வது வரம்பெறுசருக்கத்து 83-ஆம் செய்யுளின் முற்பாதிவரையுமே யுள்ளது. (எஞ்சியவை சிதைந்திறந்தொழிந்தனபோலும்.)

இதனைச் செந்தமிழ்ப் பிரசுரமாக வெளியிட்டுவந்ததில் இப் பகுதியில் வரம்பெறுசருக்கத்தின் 83-ஆம் செய்யுளின் முற்பாதி வரை வெளியிடலாயிற்று. எஞ்சிய பாகமுமுள்ள ஏட்டுப்பிரதிகள் கிடைக்காமையால் அடுத்த பகுதிமுதல் இதுவரை வெளியிடப் பெற்ற செய்யுட்களுக்குக் குறிப்புரையும் விஷயசூசிகையும் முக வுரை முதலியனவும் எழுதி வெளியிடவேண்டியதாயிருக்கிறது. இந்நூலின் எஞ்சிய பகுதியுமுள்ள ஏட்டுப்பிரதியுடையார் கொடுத் துதவுவார்களாயின் நூலைமுற்றுவித்துப் பின் குறிப்புரை முதலிய வற்றை வெளியிட உதவியாயிருக்கும்.

T. K. இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.